# பனிமலர்

## 1

அழகிய விழிகள் அகல விரிய சற்று நேரம் எதுவும் தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

வழக்கமாய் துறுதுறுவென அலுவலகத்தில் நடமாடி வேலை பார்த்துக் கொண்டிருப்பவள் இப்படி பிரமை பிடித்தாற்போல் நின்றது மேனேஜர் சபேசனை ஆச்சரியப் படுத்திருக்க வேண்டும்.

''என்னாயிற்று நிர்மலா?'' என்று கனீர்க்குரலால் அவளை உலுக்கியபோது நிர்மலா தன்னிலைக்கு வந் தாள்.



''ஒன்றுமில்லை... ஸார்...'' என்றாள் அவசரமாய்.

ஆனாலும் மை தீட்டிய அவளது விழிகள் மேனே ஜரையே நோட்டமிட்டன. சபேசனுக்கு அறுபது வயது இருக்கும். ஏறக்குறைய அவளுடைய தந்தையின் வயது தான்.

தந்தை சிவராம் உயிரோடு இருந்தால் இப்படித்தான் கம்பீரமாய் டை கட்டி கோட்டும் சூட்டுமாய் புன்னகை ததும்ப இருந்திருப்பார். ஆனால், சென்ற வருடம் நடந்த அந்த பாழும் விபத்து, தந்தையை அப்படியே பலி கொண்டு போய்விட்டதே!

தந்தையின் மறைவுக்குப் பின்தான் எத்தனை மாற் றங்கள்?

எத்தனை சரிவுகள்?

பொருளாதாரத்தில்... குடும்பச் சூழ்நிலையில்...! நோய்வாய்பட்டு விட்ட அம்மா...

விபரம் அறியா தங்கச்சி...

அப்பாவின் சொற்ப பென்ஷனைத் தவிர எந்தவித வருமானமும் இல்லாத மலைக்க வைத்த எதிர்காலம்...

வேறு வழி தோன்றாது கல்லூரிப் படிப்பை அத்தோடு நிறுத்தி, வேலையைத் தேடிக் கொண்டாள் நிர்மலா.

பிதுங்கும் பஸ்ஸில், கூட்ட நெரிசலில் டிபன் பாக்ஸ் அடைத்த ஹேண்ட் பேக்குடன் வியர்க்க விறுவிறுக்க அலுவலகத்திற்கு ஓடக் கற்றுக் கொண்டாள்.

கிடைக்கும் மூவாயிரம் ரூபாய் சம்பளத்திற்காக முகம் சுழிக்காமல் மாலை ஆறு மணி வரை உழைக்கக் கற்றுக் கொண்டாள்.

வீடு வந்ததும் 'அக்கடா' என்று இருந்துவிட முடியாதபடி வரிசையாய் வேலைகள் தொடரும். தாயாரின் மருந்துகளை வேளை வாரியாகப் பிரித்துக் கொடுப்பதில் இருந்து தங்கை வசுதாவுக்கு டியூசன் எடுப்பது வரை உற்சாகமாய் எல்லா வேலைகளையும் செய்வாள்.

தாய் பார்வதிதான், மகிழ்ச்சியாய் துள்ளித் திரிய வேண்டிய வயதில் செல்ல மகள் இப்படி மாடாய் உழைத்து கஷ்டப்படுகிறாளே... என்று கண்ணீருடன் மனம் நோவாள்.

சில சமயம் மனம் தாங்காமல், ''ரொம்பவும் உன்னை கஷ்டப்படுத்துகிறேனா கண்ணு...'' என அரற்றுவாள். அப்போதும் நோகும் தாய் மனத்திற்கு ஆறுதலாக ஏதாவது உரைத்தபடி வேலைகளை சந்தோஷமாய் தொடர்வாள் நிர்மலா.

சட்டென ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில், சுற்றம் எல்லாம் அறுந்து விலகிவிட... இருந்த ஒரே சொந்தமாய் வந்து சேர்ந்தார் ரங்கு மாமா!

ரங்கு மாமா ஒரு வகையில் அம்மாவின் தூரத்து உறவு. சிறு வயதில் பிரம்மச்சாரி கோலம் பூண்டு எங்கெங்கோ சுற்றித் திரிந்து எப்படியெல்லாமோ பிழைப்புத் தேடியவர். கடைசியில் இளைப்பாறுகிற வயோதிக வயதில் இங்கு வந்து விட்டார்.

நிர்மலாவும்; சரி நம் ஆறுதலுக்கு வீட்டுத் துணைக்கு ஒரு ஆள் வந்ததென நிம்மதி கொண்டாள். ரங்கு மாமாவால் வரும்படி கிடையாது போலவே, அவரால் உபாதையும் கிடையாது.



அவ்வப்போது மூக்குப்பொடி டப்பி நிரப்புவதற்கும், வாயில் குதப்பும் சீவல் வெற்றிலைக்கும் காசு கேட்டு நிர்மலாவிடம் குழைவார்.

அப்போதெல்லாம், ''நிர்மலா கண்ணு; என் செல்லம்... என் சின்னக் குட்டிம்மா; மாமாவுக்கு ஒரு ரூபா கொடுடா'' என கெஞ்சாத குறையாய் நிர்மலாவை தாஜா செய்வார்.

நிர்மலாவும் அவரது கொஞ்சலான கெஞ்சலை ரசித்தபடி வேண்டுமென்றே பிகு செய்வாள். அவரது கொஞ்சல் வார்த்தைகள் அவளுக்கு மறைந்த அன்புத் தந்தையின் பாசத்தை நினைவுபடுத்தி நெகிழச் செய்யும்.

அதற்காகவே மாமாவை நிறைய கொஞ்ச வைத்து விட்டு காசைக் கொடுப்பாள் நிர்மலா.

ஆயிற்று. மறுபடியும் நினைவுகளில் மீண்டும் நிர்மலா தன்னிலைக்கு வந்தபோது திடுக்கிட்டாள்.

மேனேஜர் சபேசன் கைகளை கட்டியபடி வியப்புடன் அவளை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னம்மா விஷயம்?''

''ஸார்..'' என்றபடி பல்லைக் கடித்தவள் இனியும் அவரிடம் விஷயத்தை மறைப்பது நல்லதல்ல என்பது போல் அத்தனையையும் கொட்டிவிட்டாள்.

விஷயம் இதுதான்.

தாய் பார்வதியின் உடல்நிலை இம்முறை மிகவும் மோசமாகி விட்டது. கை, கால் பகுதிகள் பெரிதாய் வீங்க ஆரம்பித்துவிட்டன. பரிசோதித்த டாக்டர்கள் சர்க்கரையும் உப்புச் சத்தும் அதிகமாகி விட்டது எனவும் உடலின்

சுத்திகரிப்பு உறுப்புக்கள் செயலிழந்து விட்டதாகவும் அதிர்ச்சியாய் தெரிவித்தனர்.

'இனி பார்வதியை காப்பாற்றி குணப்படுத்த தினமும் மருத்துவமனையிலே வைத்து செயற்கை கருவிகள் உதவியுடன் சிகிச்சையளிக்க வேண்டும். அதற்காக மருத்துவச் செலவு ஒரு லட்ச ரூபாய் வரை ஆகும். உடனே ஏற்பாடு செய்யுங்கள்..' என்று கூறி விட்டனர்.

விஷயத்தைக் கேட்டு இடி விழுந்தது போல மலைத்துப் போனாள் நிர்மலா. ஒரு லட்ச ரூபாய்...!

எங்கே கிடைக்கும்? எப்படி புரட்டுவது?

விஷயத்தை கேள்விப்பட்டதிலிருந்து மனம் பதைத்து இப்படி பிரமை பிடித்தாற் போல்தான் ஆகிவிட்டாள்!

கடவுளே! தாயாரின் உயிரைக் காப்பாற்ற முடியாமலே போய் விடுமோ? என்ன ஒரு கொடுமை!

துடிக்க துடிக்க அவளது தாயார் நோயால் அல்லல்பட்டு சாவதை கண் குளிரப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப் போகிறாளா?

என்ன செய்யப் போகிறாள்? கிடைக்கிற மூவாயிரம் ரூபாய் சம்பளத்தில் அரை வயிற்றுக் கஞ்சியுடன் குடும்பம் நடத்தும் அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்?

''விடு செல்லம்... நடக்கிறபடி நடக்கட்டும். வீணாய் பணத்தை விரையம் பண்ண வேண்டாம்...'' என விம்மலை அடக்கி சோகப் புன்னகையுடன் தாய் பார்வதி சொன்னபோது அவளுக்கு உயிரே போய் விடும்போல் இருந்தது.



ஒரு வழியாய் தாயை சமாளித்து, புரியாமல் தவித்த தங்கையை ஆறுதல் படுத்தி அதே மனநிலையில் அன்று அலுவலகத்திற்கும் வந்து விட்டாள்.

அந்த மனநிலைதான். அவளை பிரமை பிடித்தாற் போல், தன்னிலை மறக்கச் செய்து, சிலையாகவும் ஆக்கிவிட்டிருந்தது.

மேனேஜர் சபேசனிடம் எல்லா விஷயத்தையும் சொல்லி ஆர்வமாய் அவரது முகத்தைப் பார்த்தாள் நிர்மலா.

ஒரு லட்ச ரூபாய்! பெரிய தொகைதான்..! உச்சரித்த சபேசனின் முகத்தில் நிஜமான வருத்தம் தொனித்தது. கவலையுடன் அவள் முகத்தைப் பார்த்தவர் தன்னால் உதவி செய்ய முடியாத இயலாமையை நினைத்து குனிந்து கொண்டார்.

அவர் மட்டும் என்னவாம்! அவர் நிலைமையும் அதுதானே? ரிட்டையர் ஆகிவிட்ட போதும்.. முதலாளியிடம் கெஞ்சி குடும்பத்திற்காக இரண்டு வருடம் எக்ஸ்டென்ஷன் பெற்றுள்ளவா வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரால் எப்படி உதவ முடியும்?

அவரால் மட்டுமல்ல. யாராலும் அவளுக்கு உதவ முடியாது!

விட்டேற்றியாய் உதடுகளைப் பிதுக்கியவர் சோகம் பொங்க நிர்மலாவைப் பார்த்தாள்.

''கஷ்டமான சூழ்நிலை! என்னாலும் உதவ முடியாது. நம் முதலாளியிடமும் கேட்க முடியாது. வெளிநாடு சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்.''

இங்கு இருந்தால் மட்டும் முதலாளி கொடுத்து விடவா போகிறார்? ஒருமுறை நிர்மலா குடும்ப அவசர செலவுக் காக ஆயிரம் ரூபாயை அட்வான்ஸாய் அவரிடம் கேட்ட போது அவர் கோபமாய் வந்த வரத்து...? இன்னும் ஞாபக மாய் அழியாமல் நிர்மலாவின் நினைவில் இருக்கிறதே! அவராது.. ஒரு லட்சம் கொடுப்பதாவது?

நிர்மலா அன்று அதன்பின் மனநிலையைக் கட்டுப் படுத்தியவள், மனதில் எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் ஒரு மரப்புடன் சீராக அலுவலகப் பணியில் ஈடுபட்டாள்.

''மாலை வேலை முடிந்து முடக்கிவிட்ட இயந்திரம் போல் வீடு திரும்பியபோது வீட்டு வாயிலில் அவளுக் காக ஆவலாய் காத்திருந்தார் ரங்கு மாமா.

''நிம்மி. கண்ணு, ஒரு லட்சம் கிடைக்க ஒரு வழி கிடைத்திருக்கிறது..!'' என்றார் உற்சாகமாக.

## 2

ரங்கு மாமா சொன்னதை ஒரு கணம் நிர்மலாவால் நம்ப முடியவில்லை. ''என்ன வழி?'' என்றாள் திகைத்த வளாய்.

''கிடைத்திருக்கிறது. ஆனால், அதற்கு நீ ஒப்புக் கொள்ள வேண்டும்...'' பீடிகை போட்டார் மாமா.



''நானா?''

''ஆமாம். நீ மணிப்பூர் போக வேண்டும். அதுவும் ஆறு மாதங்கள்...''

மறுபடியும் ஒரு பீடிகை போட நிர்மலா பொறுமை யில்லாதவளாய் ''ஐயோ, விஷயத்தைச் சொல்லுங்கள் மாமா!'' என்றாள் பரபரப்புடன்.

ரங்கு மாமா திரும்பி ஒரு கணம் ஜன்னல் வழியாய் உள்கட்டை நோக்கியவர் உதட்டில் விரலை வைத்தார்.

''ஷ்... மெதுவாய் கண்ணு. பார்வதி விழித்துக்கொண்டு தான் இருக்கிறாள். அவளுக்கு விஷயம் தெரிய வேண்டாம். ரகசியமாய் பேச வேண்டும்...''

''ரகசியமா?''

கண்கள் விரிய படபடத்தவளை அடக்கி மறுபடியும் கிசுகிசுப்பானார்.

''இரவு பத்து மணிக்கு எல்லோரும் தூங்கிய பிறகு மொட்டை மாடியில் வைத்துப் பேசுவோம்...''

நிர்மலாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

வியப்புடன் அவரையே பார்த்தவாறு அகலப் போனாள்.

''கண்ணு...''

மறுபடியும் விளித்தார் மாமா.

''பொடி டப்பாவுக்கு காசு கண்ணு.''

மாமா தலையைச் சொரியும் முன் ஹாண்ட் பேக்கி லிருந்து பணம் எடுத்துக் கொடுத்தவள், ''ஒரு ரூபாய்க்கு

இப்படி அல்லாடும் மாமா ஒரு லட்ச ரூபாய்க்கு வழி சொல்லப் போகிறாரா...'' என இகழ்ச்சிப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தாள்.

கட்டிலில் அவள் வருகையை எதிர்பார்த்ததுபோல் பார்வதி சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்திருந்தாள்.

தாயைக் கண்டதும், கொண்டிருந்த கவலையை மறந்து, அவள் கண்டு பிடித்து விடாதபடி வெண்பற்கள் அனைத்தையும் காட்டி அழகாய் புன்னகைத்தாள்.

சுவேதா இன்னும் பள்ளி முடிந்து திரும்பியிருக்க வில்லை.

அவசர அவசரமாய் ஹாண்ட் பேக்கை வைத்துவிட்டு மாலை தாயாருக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளை கொண்டு சென்றபோது ''என்ன அவசரம் செல்லம்?'' என சிணுங்கலுடன் வாங்கிக் கொண்டாள் பார்வதி.

நிர்மலாவும் அப்படியே தாய்க்குப் பக்கத்தில் உட் கார்ந்து கொண்டாள்.

பார்வதி நடுங்கும் கரங்களால் நிர்மலாவின் தலையைக் கோதியவள் வாஞ்சையுடன் முடியை நீவி விட்டாள்.

நிர்மலாவும் ஒரு கணம் நிமிர்ந்து தாயைப் பார்த்தாள்.

பளபளப்புடன் பளீர் புன்னகை ததும்ப இருக்கும் தாயின் முகம் இப்போது சுருக்கங்கள் விழுந்து வயோதிக களையுடன்... நோய் வாய்ப்பட்டு தாயின் வலு வான உடம்புகூட பெருகிழந்து.. மெலிந்து... பரிதாபத் தோடு...

பார்க்கப் பார்க்க கண்களில் நீர் மல்கியது நிர்மலா வுக்கு.



தாயின் முன் அழுதுவிடக் கூடாது என சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

பார்வதியின் நிலையும் அப்படித்தான். தனக்காக ஓடாய் தேயும் செல்ல மகளின் நிலை கண்டு துடித்து அடக்க முடியாமல் கண்ணீரைச் சிந்தினாள்.

நிர்மலாவுக்குப் புரிந்தது.

தாயாருக்கு உடம்பு வேதனை மட்டுமல்ல. தன்னால் எதுவும் செய்ய முடியாமல் பாரமாய் போய் விட்டோமே என மன வேதனையுமகூட.

அப்படியே தாயை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். ஆறுதல் படுத்தினாள். டாக்டர் சொன்ன ஒரு வாரக் கெடு பூதாகரமாய் மூளையில் உதித்து பயங்காட் டியது.

ஒரு வாரத்திற்குள் பணத்தை ஏற்பாடு செய்து மருத்துவமனையில் சிகிச்சையை ஆரம்பிக்காவிட்டால் பார்வதியின் உயிருக்கே ஆபத்தாம். பின் அவளை யாரும் காப்பாற்ற முடியாதாம்...!

ஒன்று... இரண்டல்ல.. ஒரு லட்சம்..! எங்கே போவது? யாரைக் கேட்பது?

அன்று இரவு மொட்டை மாடியில் ரங்கு மாமாவைக் கேட்டபோது, ''நான் சும்மா சொல்லவில்லை. நிஜமா கவே ஒரு லட்சம் கிடைக்க வழி இருக்கிறது...!'' என சத்தியம் செய்தார் மாமா.

நம்ப முடியாமல் பார்த்தாள் நிர்மலா.

ஆனால், கொஞ்ச நேரத்தில் மாமா சொன்ன விஷ யத்தைப் பார்த்ததும் நம்பும்படியாகத்தான் இருந்தது.

மாமா சொன்ன விஷயம் இதுதான்.

மாமா வழக்கமாய் தெருவோர வெற்றிலை பாக்குக் கடை பெஞ்ச் ஒன்றில்தான் உட்கார்ந்து பொழுது போக்கு வார். தன் பாதி நேரத்தை கழிப்பார். அந்தக் கடையின் எதிரே நகரின் மிகப் பெரிய ஏற்றுமதி நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. அவ்வப்போது அந்த ஏற்றுமதி நிறுவனத்தின் ஊழியர்கள் ஏதாவது பொருட்கள் வாங்க மாமா இருக்கும் கடைக்கு வருவதுண்டு.

அப்படி அவர்கள் வரும் சமயம் அவர்களிடம் பேச்சுக் கொடுத்து நன்கு பழகியும் கொண்டார் மாமா.

அப்படி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பழக்கம் தான் இன்று அந்த ஒரு லட்ச ரூபாய்க்கு வழிகாட்டி யிருக்கிறது.

அந்த ஏற்றுமதி நிறுவனம் நடத்தும் முதலாளி பெரிய கோடீஸ்வரராம். அவருக்கு இந்தியா முழுவதும் பல நிறுவனங்கள், தொழிற்சாலைகள் இருக்கிறதாம்.

அவருக்கு மணிப்பூரில் சாயத் தொழிற்சாலை ஒன்று இருக்கிறதாம். அங்கு ஆறு மாதம் அலுவலகத்தில் பணி புரிவதற்கு ஆள் தேவையாம். வழக்குகளில் அனுபவ முள்ளவர்கள் தேவையாம். வேலை கிடைக்குமாம். கேட்கும் சம்பளத்தை தந்து விடுவார்களாம்!

மாமா சொல்லச் சொல்ல தலை சாய்த்து நிர்மலா தீவிரமாய் சிந்தித்தவள், ''அது என்ன ஆறு மாதக் கணக்கு?'' என்றாள் குழப்பமாய்.

''அது ஒன்றுமில்லை. கம்பெனியின் முதலாளிக்கு வடநாட்டில் நிறைய தொழிற்சாலைகள் இருக்கிறது.



அவைகளின் நிர்வாகத்தை எல்லாம் மணிப்பூரில் ஆறு மாதம் தங்கி கவனிப்பார். மீதி ஆறு மாதம் சென்னையில் தங்கி இங்குள்ள தொழிற்சாலைகளை கவனிக்க... நான் சொன்னேனே அவர் பெரிய கோடீஸ்வரர் என்று...''

மாமா பெரிதாய் இழுக்க படபடக்கும் விழிகளோடு பார்த்தவள், ''அதெல்லாம் சரி நமக்கு ஒரு லட்சம் தருவாரா? அதைச் சொல்லுங்கள்'' என்றாள் படபடப் புடன்.

''ஒரு லட்சம் மட்டுமல்ல...! பார்வதியின் முழு மருத்துவ செலவுகளை ஏற்றுக் கொள்வதாய் சொல்லிட் டார். அவருக்கு இரக்க குணம் ஜாஸ்தி. நீ வேலைக்கு சம்மதித்தால் நாளையே கம்பெனி, பணத்தை ஹாஸ் பிடலுக்கு சாங்ஷன் செய்து விடுவார்களாம். உடனே அம்மாவுக்கு மருத்துவ சிகிச்சையையும் ஆரம்பித்து விடலாம். என்ன சொல்கிறாய்?''

''நிஜமாகவா?'' மாமா சொல்வதை நம்ப முடியாமல் மெய்யாகவே மலர்ந்தாள் நிர்மலா.

ஆனால், காரியங்கள் மளமளவென நடைபெற்றன. மறுநாள் நிர்மலா மணிப்பூரில் வேலை பார்க்க ஒப்புக் கொண்டதும் நகரின் பெரிய மருத்துவமனை ஒன்றில் பார்வதியைச் சேர்த்து மருத்துவ சிகிச்சைகளும் செய்ய ஆரம்பித்தாயிற்று.

சிகிச்சைக்கான பணம் ஒரு லட்சத்தையும் அட்வான் ஸாய் அந்தக் கம்பெனி கட்டியபோது அதன் - முதலாளி யின் குணத்தை - நினைத்து, நெகிழ்ந்து போனாள் நிர்மலா.

ஆயிற்று - தாயாரின் உடல்நிலை சிகிச்சைகளால் முன்னேற்றம் அடைய தான் ஒப்புக் கொண்டபடி - மணிப்பூரில் ஆறு மாத கால வேலையைப் பார்க்க அன்றைய மாத இறுதியில் கிளம்பினாள்.

மணிப்பூர் செல்ல அவளுக்கு டிக்கெட் பதிவு செய்யப்பட்டிருந்தது. கூடவே கம்பெனி முதலாளியும் வருகிறாராம். ரங்கு மாமா, பார்வதி, தங்கை சுவேதா என எல்லோரிடமும் பிரியா விடை பெற்று ரயிலேறியவள் - முதலாளியாய் - நெடுநெடுவென ஆறடி உயரத்துடன் முறுக்கிய மீசையும், திடமான உடற்கட்டுடன் இள வயதுக்காரன் - அலட்சியமாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அதிரத்தான் செய்தாள்.

# 3

அதிர்வோடு கூபேயில் வந்து அவனுக்கு நேர் எதிரான சீட்டில் உட்கார்ந்தவள் அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அரண்டுதான் போனாள்.

''ஒரு லட்சம், உன் அழகிற்கு சரியான விலை தான்!'' அவன் உச்சரித்து சிரித்தான். அவன் பற்களில் தெரிந்த ஒழுங்கற்ற தன்மை அவளை பயப்படுத்தியது.



இம்முறை கூலிங்கிளாஸை வேறு கழற்றியிருந்தான். அவனது பெரிய கருத்த விழிகள் அவளை மேலிருந்து கீழ்வரை விழுங்குவது போல் படம் பிடித்தன.

அந்தக் கண்களை உற்றுப் பார்த்த நிர்மலா அதிர்ந்தாள். அப்பா! ஊசி துளைப்பது போல் என்ன ஒரு பார்வை! இதுவரை அவள் யாரிடமும் பார்த்திராத விழிகள் அல்லவா அது?

அந்த விழிகளில் சிறிதும் கருணையோ, சாந்தமோ, இல்லாமல் கடித்துக் குதறும் புலியின் வெறித்தனம் தென்படுவது கண்டு நிர்மலா மிரண்டாள்.

அவன் அலட்சியமாய் பைகளை துழாவி சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான். புகை விட்டவாறு, யோசிப்பது போல் நெற்றியைப் பிடித்தவன், ''தட்... ஓல்ட் மேன்... உன்கூட வந்தாரே... அவர் பெயர் என்ன சொன்னாய்...?'' என்றான் விட்டேற்றியாக.

''ரங்கு மாமா...!''

''ஓ... ரங்கு மாமா? பெகூலியர் நேம். அந்தக் கால டிரங்குப் பெட்டிபோல ரங்கு மாமா... டிரங்குப் பெட்டி... டிரங்கு மாமா...''

அவன் பெரிதாய் பாடிக் காட்டி பெருங் ஹாஸ்யத்துடன் சிரித்தபோது நிர்மலா அவனை விசித்திரமாய் தான் பார்த்தாள். கொஞ்சம் லூசாய் இருப்பானோ?

நிறைய பணம் சேர்ந்ததும் மதியிழந்து விடும் பணக்கார லூசுகளைப் பற்றி அவள் ஓரளவு கேள்விப் பட்டிருக்கிறாள். அந்த லிஸ்ட்டில் இவன் ஒருத்தனாய் இருக்குமோ..?

அவள் நினைக்கும்போதே, ''என்ன? சரியான லூசாய் இருப்பான் என்ற நினைப்பு ஓடுகிறதோ?'' கடுங்குரலில் அவன் கேட்டபோது மிரண்டு புன்னகையை நிறுத்தி தான் போய் விட்டாள்.

எவ்வளவு துல்லியமாய் மன ஓட்டத்தைப் பிடிக்கிறான்! இவன் சாதாரணவன் இல்லை!

அரண்டு பார்த்தவளின் விழிகளையே உற்றுப் பார்த்தவன். ''உன் கண் மை தீட்டிய அழகு விழிகள் இந்த மருண்ட படபடப்பான பார்வை எல்லாம் எனக்குப் பிடித்திருக்கிறது...'' என்றான் சாதாரண குரலில்.

சட்சட்டென மாறிவிடும் சுபாவத்தில் அவன் பேசியது நிர்மலா இதுவரை யாரிடமும் கண்டிராத ஒன்று.

அவனையே பார்த்தவள் அவன் உற்று நோக்கியதும் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். அவன் தன் மேனியையே ஊடுருவிப் பார்ப்பது கண்டு உடம்பு கூசியது.

அவளின் அந்த வெட்கத்தை அவன் ரொம்பவும் ரசித்தான்.

பின் ஏதோ நினைத்தவனாய், ''என் பெயர் என்னவென்று தெரியுமா?'' என்றான்.

நிர்மலா நிமிர்ந்து தலையாட்டினாள்.

''தலையாட்டினால் போதாது. வாயைத் திறந்து பதிலை உச்சரிக்க வேண்டும்...''

''தெரியும்...'' என்றாள் நிர்மலா வேண்டுமென்றே உரத்த குரலில்.



அவன் தலையை வேகமாய் மறுத்தசைத்தவன், ''நான் சொன்னது இதையல்ல... என் பெயரை.. என் பெயரைச் சொல்லு?'' என்றான்.

ஒரு கணம் திடுக்கிட்டுப் பார்த்துவிட்டு அவன் பெயரை, ''ரா... ஜா...'' என மெல்ல உச்சரித்தாள்.

''ஆங்... அதுதான்! என் பெயரை உன் சின்ன பவழமான செவ்விதழ்கள் உச்சரிக்க வேண்டும். பெண்கள் என் பெயரை உச்சரிப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும்...''

மறுபடியும் வெடிச்சிரிப்பு.

சரியான ஸேடிஸ்ட்டாய் இருப்பானோ? தவறுதலாய் சம்மதித்து பெரும் ஆபத்தில் வந்து மாட்டிக் கொண்டோமோ?

முதல் முறையாய் நிர்மலாவினுள் அந்த பய உணர்வு எழும்பியது.

''பயப்படாதே நான் ஸேடிஸ்ட் அல்ல...'' ராஜா அதற்கு விளக்கமும் கொடுத்தான்.

மறுபடியும் மனதை பிடித்து விட்டான். என்ன ஒரு கூரான சக்தி. இவனிடம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

அவனிடம் பேச்சை தவிர்த்து விட்டால் நல்லது என்ற நினைப்புடன் ஜன்னல் வழியே விரைந்தோடும் காட்சிகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

ஆனால், ராஜா அவளை விடுவதாய் இல்லை.

சொடுக்கிட்டு அவளை தன் பக்கம் திருப்பினான்.

''நிர்மலா? ம்ம்... உன் அழகுக்கு ஏற்ற பெயர்தான்?'' என ஒரு கணம் நிறுத்தியவன் தொடர்ந்து ''இதோ பார்

முதலில் நீ என்னைப் பற்றி முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும். திருக்குறள் படித்திருக்கிறாயா? அதில், ''புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்'' என வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

அதனால் என்னுடைய உணர்வுகளை நீ நன்கு புரிந்து கொள். நாம் பல நாட்கள் பழகியது போல் உடன் நெருங்கி விடலாம்...''

'நெருங்கி விடலாம்..' என்ற அவனது வார்த்தை அவளை முணுக்குறச் செய்தது. இதில் வள்ளுவரை மேற்கோள் காட்டி குறள் வேறு. சரியான ஞானக்கிறுக்கனாய் இருப்பானோ?'

அவள் நினைப்பதை உறுதி செய்பவன்போல் ராஜா தொடர்ந்தான். ''நான் ஒரு ஞானக்கிறுக்கன். என் ரசனையே தனி என் பொழுதுபோக்குகளும் ரொம்பவும் வித்தியாசப்படும்.''

மேலும், ஏதோ சொல்லப் போனவன் சட்டென நிறுத்தினான். ''வேண்டாம்.. இப்போது வேண்டாம் போகப் போக நீயே தெரிந்து கொள். அப்போதுதான் சுவாரஸ்யம் இருக்கும்...''

மறுபடியும் வெடிச்சிரிப்பு.

சிரித்து முடித்ததும் தனது நீள லெதர், பேக்கைத் திறந்து ஆங்கில இதழ் ஒன்றை விரித்து வைத்துக் கொண்டான்.

அவன் இத்தோடு பேச்சை முடித்தானே என நிர்மலா நிம்மதியடைந்தாலும் தற்செயலாய் அவன் கையில் வைத்திருந்த இதழின் அட்டைப் படத்தை பார்த்து மிரண்டாள்.



ஒரு பெண்ணின் நிர்வாணக் கோலம் அது 'அந்த மாதிரி' புத்தகம்!

அவள் தன் கையிலுள்ள இதழின் புகைப்படத்தைக் கண்டு மிரள்வதை ராஜா கவனித்து விட்டான்.

கண்டுபிடித்ததும் அவனது இதழ்களில் ஒரு ஆணவமான குறுநகை ஓடியது.

அந்த ஆணவமான குறுநகையைக் கண்டதும் நிர்மலாவினுள் சுய கௌரவம் விழித்துக் கொண்டது.

'என்ன பயம்? எதற்கு பயப்பட வேண்டும்?' தோள் குலுக்கி மறுகணமே சிலிர்த்துக் கொண்டாள்.

இம்முறை அவன் அவளை கவனிக்கவில்லை. புத்தகத்தில் ஆழ்ந்து விட்டான். வக்கிரத்தைத் தூண்டும் புத்தகம்! அப்படி என்ன ரசனையோ!

ஒரு கணம் இப்படி முன்பின் தெரியாத அந்நியனுடன் அறிந்திரா ஊர் ஒன்றுக்கு பயணிப்பது அவளுக்கு மிகவும் எரிச்சலைத் தந்தது.

ஆனாலும் ஒரு லட்சம்; அந்த ஒரு லட்சம்...? வேறு யாரும் அவளுக்கு கொடுக்கவில்லையே! இந்தப் புண்ணியவான்தானே வலிய வந்து கொடுத்திருக்கிறான்!

அதனால்தானே தாயாரை மருத்துவமனையில் சேர்த்து உடனடியாக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய முடிந்தது..? பணம் கிடைத்து தாயாரை சேர்த்தபோது அந்தத் தாயின் முகத்தில்தான் என்ன ஒரு பிரகாசம்...

ஒரு கணம் நெகிழ்ச்சியுடன் நினைத்தவள், மறுகணமே அதையும் சிந்தித்தாள்.

ஆறு மாதங்கள் மணிப்பூரில் வேலை பார்ப்பதற்காக ஒரு லட்ச ரூபாயைத் தூக்கித் தரும் இவனை எப்படி நினைப்பது?

ஒருவேளை தான தர்மம் செய்வதாய் நினைத்துக் கொடுக்கிறானோ? ஒரு கணம் திரும்பி அவன் முகத்தை வியந்து பார்த்தவள் முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசையையும் கீழே கறுத்து இறுக்கமாய் இருந்த உதடு களையும் ஆச்சரியமாகவே பார்த்தாள்.

# 4

ஆயிற்று. அதற்குப் பின் சில மணி நேரங்கள் ராஜா அவளைத் தொந்தரவு பண்ணவில்லை. ஏன் நிமிர்ந்து கூட பார்க்கக்கூட இல்லை.

அவன் கையிலிருந்த ஆபாச புத்தகம் மாறி அலுவலக பைல் குறிப்பேடு ஒன்று ஆக்கிரமித்திருந்தது. அதை ஆவலாய் புரட்டி ஏதோ கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிர்மலா வெளியே பார்த்துக் கொண்டிருந்தவள் வண்டி தமிழ்நாடு எல்லையைக் கடந்து ஆந்திர மாநிலத்தினுள் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

சொந்த மண்ணையும், மனிதர்களையும் விட்டு ஊர் விட்டு ஊர் போய் என்ன இது ஒரு பிழைப்பு? என எரிச்சலாகவும் நினைத்தான்.



தனது இயலாமையை நன்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறானோ? என ராஜா மீது ஆத்திரமும் வந்தது.

ஊரில் எத்தனை பெண்கள் இருக்க... நம்மை மட்டும் எப்படி தேர்ந்தெடுத்தான்... வலியப்போய் மாட்டிக் கொண்டோமோ? இவனைப் பார்த்தால் அவ்வளவு நல்லவனாய்கூட தெரியவில்லையே...!

மனம் பதைக்க சிந்தித்தவள் திடீரென கண் முன் விரல்கள் சொடுக்கிடுவது கண்டு திடுக்கிட்டாள்.

அவன்தான் சொடுக்கிட்டிருந்தான்.

''முட்டாள் தனமாக யோசித்து மனதை அலைய விட வேண்டாம்..'' உபதேசம் செய்தான்.

அவன் தன் மனநிலையை படித்து விட்டதை விட முட்டாள் என்றது அவளை ஆவேசப்படுத்தியது.

சுள்ளென்று நிமிர்ந்தவள், ''மடையர்கள் எதையாவது நினைத்துக் கொண்டால் நான் என்ன செய்வது?'' என்றாள் பதிலுக்கு.

''நான் மடையனா? சரியான பதிலடிதான்...!'' அவன் ரசிப்புடன் சிரித்தவன், ''இதோ பார், உன்னுடைய அழகான தலையைச் சாய்த்து கண்கள் சொருக நீ எதையாவது நினைத்து கொண்டிருக்கிறாய். அதைத்தான் வேண்டாம். வீண் யோசனைகளை போட்டுக் குழப் பாதே!'' என்றேன்.

அவள் பதில் பேசாமல் அவனை முறைத்தாள்.

எப்படி முறைத்தாலும் நீ அழகுதான்! அழகு அழகு தான்!''

டயலாக் பேசியபடி வேண்டுமென்றே அவளது உடல் அங்கங்களை ஊடுருவதுபோல் ஒரு விழுங்கப் பார்வை பார்த்து ஆத்திரப்படுத்தினான்.

மேலும் அவளை எரிச்சல் படுத்துவதுபோல் சிகரெட் பற்ற வைத்து அறை முழுக்க புகையை ஊதினான்.

கொஞ்ச நேரத்தில் வண்டி ஆந்திராவின் நெல்லூர் ஸ்டேஷனில் நின்றது. அவன் இறங்கிப் போய் பழங்களையும் காலை நாளிதழ் ஒன்றையும் வாங்கி வந்தான்.

பழங்களைச் சாப்பிட அவளிடம் நீட்டியபோது நிர்மலா தலையசைப்புடன் மறுத்தாள்.

''இன்னும் மூன்று நாள் தொடர்ந்து பயணம். பட்டினி கிடப்பதாய் உத்தேசமா,''

அவன் கேட்டதற்கு வேண்டுமென்றே பதில் சொல்லாமல் முகத்தை திருப்பி பராக்கு பார்க்க ஆரம்பித்தாள்.

அவள் பதில் சொல்லாமல் திருப்பிக் கொண்டதை அவனும் பெரிதாய் நினைக்கவில்லை.

அவன் பாட்டுக்கு உட்கார்ந்து பழங்களை சாப்பிட ஆரம்பித்தான்.

ரயில் மறுபடி கிளம்பியது.

நிர்மலா ஜன்னல் வழியாய் வெளிப்புறமே பார்த்துக் கொண்டிருந்தவள் எவ்வளவு நேரம்தான் முகத்தை திருப்பி வெளியே பார்த்துக் கொண்டிருப்பது என சலிக்கவும் செய்தாள்.



பார்வையை உள்ளே திருப்பினாலோ... எதிரே குத்துக் கல்லாய் அவன்! பார்த்தால்... ஏதாவது பேச்சுக் கொடுத்து விடுவான். வாயைக் கிளறுவான். அந்த பயத்திலே விருப்பம் இல்லாவிட்டாலும் வெளியவே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்தில் மறுபடி அவள் முன்னால், 'பட்டர் சாண்ட் விச் செய்த ப்ரெட் ஸ்லைசை' அவனது கரங்கள் நீட்டியது.

திடுக்கிட்டுப் பார்த்தவளை, ''ம்ம் சாப்பிடு!'' என அதட்டவும் செய்தான்.

நிர்மலா ஒன்றும் பேசாமல் வாங்கிக் கொண்டாள்.

''மணிப்பூர் எங்கே இருக்கிறது தெரியுமா?'' என்றான்.

''எங்கு இருந்தால் என்ன?'' என்றாள் அவள் பதிலுக்கு.

அவள் பதில் கேட்டு அவளையே ஓரிரு கணம் உற்றுப் பார்த்தவன், ''உனக்கு திமிர் ஜாஸ்தி...'' என்றான்.

அதற்கும், ''புரிந்து கொண்டால் சரி...!'' என்றாள் நிர்மலா பதிலடியாய்...

''என்னிடம் நீ அடங்கித்தான் போக வேண்டும். உன்னை அடக்கி விடுவேன்...''

''வீண் பகல் கனவுகளுக்கு நான் பதில் சொல்வதில்லை...''

''பகல் கனவா?'' என்றபடி வெடியாய் ஒரு சிரிப்பு சிரித்தவன், ''பகல் கனவல்ல. பேபி, இரவுக் கனவு. மணிப்பூர் வா நீ பார்க்கத்தானே போகிறாய்...'' என்றது அவளை மிரளத்தான் செய்தது.

ஆனாலும் அவன் முன் கொஞ்சமும் தன் பயத்தை காட்டிக் கொள்ளக் கூடாது என்ற இறுமாப்புடன் தோள்களை சிலுப்பிக் கொண்டாள். தன்னை மீறி என்ன, நடந்து விடும்? எதுவும் நடக்காது என்ற தைரியம் அவளுள் கூடியிருந்தது.

ஆனால், அவளை எரிச்சல் படுத்த வேண்டும் என்றே அதற்குப் பின் பாதி நேரம் அவளை விழுங்குப் பார்வையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா.

நிர்மலாவிற்கு தன்னையே அவன் உறுத்துப் பார்ப்பது தாங்க முடியாத எரிச்சலாக இருந்தது. ஆனால், வேண்டு மென்றுதானே அவன் செய்கிறான்?

மேலும் அவன் அப்படியே பார்க்க, "முன் பின் பெண்களையே பார்த்திராத பட்டிக்காட்டான்கள் இப்போது தான் மிட்டாய் கடையை பார்க்கிறார்கள்..." என்றாள் பொறுமையிழந்தவளாய் அவனை நோக்கி ஏளனத்துடன்.

ஆனால், அவன் வழக்கமான ரசிப்பு சிரிப்பு சிரித்து, "நான் பார்த்ததற்கு வேறு ஒரு காரணம் இருக்கிறது..." என்றான் பீடிகையுடன்.

"அப்படி என்ன காரணமோ?" என்றாள் அவள் கேலியை விடாமல்.

"கலிங்கத்துப் பரணியில் சோழ தேசத்துப் பெண்கள் பற்றிய வர்ணனை ஒன்று வருகிறது. அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?"

திடுமென அவன் இலக்கியம் பற்றி பேசுவது கண்டு அவள் திடுக்கிட்டுப் பார்க்க ராஜா தொடர்ந்தான்.



"சோழ தேசத்துப் பெண்கள் மிக அழகானவர்களாம். ஆடவரின் இதயத்தை கண்களாலே புண்ணாக்கி, விடுவார்களாம். பின் அந்த இதயப் புண்ணுக்கு கட்டு கட்டுவதுபோல் தங்கள் நெஞ்சோடு ஆடவரை இறுக அணைத்துக் கொள்வார்களாம். உன்னை உன்னுடைய அபாரமான தங்க நிற அழகைப் பார்த்ததும் அந்த நினைப்புதான் என் மனதில் ஓடுகிறது..."

அவன் மறுபடியும் வெடிச்சிரிப்பு சிரித்தான்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

பெரிய கவி மகாராஜா! கலிங்கத்துப் பரணியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்!

"இப்படி பேசிக் கொண்டிருந்தால் இதயம் மட்டுமல்ல உடம்பு முழுதும் புண்ணாகி விடும்" என்றாள் அவள் கைகளை உயர்த்தி எச்சரிப்பது போல்.

அதற்கும், அவன் சிரித்தான்.

"ஆகட்டுமே! அதற்குத்தானே ஆசைப்படுகிறேன். அப்படி புண்ணாக ஆனால்தானே நீ நெஞ்சாற இறுக அணைப்பாய்!" என்றபோது, "ச்சீ!" என்ற வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் நிர்மலா.

கொஞ்ச நேரம் அமைதியாய் கழிந்தது. அவள் அவனைப் பார்க்கவும் இல்லை. ராஜா அவளை சீண்டவும் இல்லை.

வண்டி ஒரிசாவைக் கடந்து வங்காளத்தின் கராக்பூர் ஸ்டேஷன் நெருங்கிக் கொண்டிருந்தது.

ராஜா கடிகாரத்தைப் பார்த்தான், "இனி ஒரு நாள் பயணம்தான். கராக்பூரை தொட்டு விட்டால் அங்கிருந்து

பகல்பூர் போய் பின் அங்கிருந்து கௌகாட்டி சென்று நாளை காலை நாம் மணிப்பூரை தொட்டு விடலாம்...'' என்றான்.

காதில் விழுந்தாலும் விழாதது போல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

ஜன்னல் வழியே அவ்வப்போது முகங்களை அவர்கள் பேசும் மொழிகளை வியப்போடு பார்த்தாள்.

எத்தனை பாஷைகள்! எத்தனை மனிதர்கள்! ஒவ்வொருவருக்கு ஒரு பிரச்சினை இருக்கத்தானே செய்கிறது. ஆனால், யாரும் இவளைப் போல் ஊர் விட்டு ஊர் வந்து பிரச்சினையை தீர்க்கவில்லையே!

மறுபடியும் அப்படியே நினைப்பு போக சட்டென தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தெரிந்தே தீக்குள் விரலை விட்டு விட்டு சுடுகிறதே என்று மருகுவது தவறு.

ஒரு ஆறு மாதம் எது பற்றியும் யோசிக்காமல் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட வேண்டும்...

பின் எல்லாம் சரியாகி விடும்...

ஆறு மாதம் கழித்து...

அம்மாவுக்கு பூரண குணமாகிவிடும். அவள் பழைய நிலைக்குத் திரும்பி விடலாம். பழைய பைனான்ஸ் கம்பெனி வேலைக்கே சென்று விடலாம். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்!

நிர்மலா மனதுள் கணக்குப் போட்டு தெளிவடைந்தவளாய் நிமிர்ந்து கொண்டாள்.



ஆனால், மறுநாள் மணிப்பூர் ஸ்டேஷனில் இறங்கியதும் அவளுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

உடைமைகளை ரயில்வே ஊழியர் எடுத்துச் செல்ல... பின்னால் நடந்த நிர்மலாவின் இடையை திடீரென இழுத்து அவளை உடம்போடு அணைத்துப் பிடித்தபடி ராஜா நடக்க ஆரம்பித்தான்.

நிர்மலா வெகுண்டு சீறியவளாய் விலகப் போனாள்.

அவளை விடாமல் அடக்கியவன், ''சும்மா பிகு செய்யாதே மணிப்பூர் வந்துவிட்டது. இனி ஆறு மாதம் என் உடல் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது உன் பொறுப்பு. இந்த நொடி முதல் உன் வேலையும் ஆரம்பமாகி விட்டது'' என்றான் ராஜா சாதாரணமாக.

## 5

ராஜா சர்வசாதாரணமாய் அந்த வார்த்தைகளைச் சொன்னான். நிர்மலாவிற்கோ காலடியில் பூமியே நழுவுவது போல் இருந்தது.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் கோபமாய் அவனிடமிருந்து தன்னை விடுவித்தபடி.

''நான் உளறுகிறேனா? சரிதான்!''

அவன் பெரிதாய் சிரித்தான்.

அவன் அப்படிச் சிரித்தது பெரும் பயத்தை அவளுள் உண்டு பண்ணியது. அடி வயிறு புரள கிலியுடனே அவனைப் பார்த்தாள்.

''நான்... ஆறு மாதம். உங்கள் அலுவலக வேலை பார்க்க வந்திருக்கிறேன்...'' என்றாள் நடுங்கும் குரலில்.

''அலுவலக... வேலை... யா?''

அவன் மறுபடியும் இடியாய் நகைத்தான்.

''நீ சரியான முட்டாள்...!'' என்றான்.

இம்முறை அவன் திட்டியதுகூட அவளுக்கு உரைக்க வில்லை. அவனை விழிகள் விரியப் பார்த்தாள்.

''இங்கு மணிப்பூரில் அலுவலக வேலை பார்க்க... உன்னை சென்னையிலிருந்து நான் கூட்டி வந்திருக் கிறேனா? அவ்வளவு பெரிய மேதையா... இல்லை நீ நிர்வாகத்தை கரைத்துக் குடித்திருக்கும் புலியா?''

அவன் பேசப் பேச ஏன் அந்த கோணத்தில்தான் சிந்திக்க மறந்தோம் என்ற நினைப்பும் அவளுள் ஓடியது. ஆனாலும், அவன் முன் தன் பலவீனத்தைக் காட்ட விரும்பாதவளாய் ஒரு சீறலுடன் நிமிர்ந்து கொண்டாள்.

''எனது மேதைத்தனம் இருக்கட்டும். பெரும் புத்திசாலி யான அறிவுக் களஞ்சியமான உங்கள் மூளையில் என்னைப் பற்றி என்ன நினைப்பு இருக்கிறது? அதைச் சொல்லுங்கள்!''

அவளது கேலியைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல், ''வெரி சிம்பிள்!'' என்றபடி அவன் தோள்களை குலுக் கினான். கண்களை கூர்மையாக்கி புருவம் உயர மேலி ருந்து கீழ்வரை அவளை ஒருமுறை பார்த்து அளவெடுத் தான்.



''பியூட்டி ஃபூல் பிகர்! அழகான உடம்பு! என்னை ஆறு மாதம் மணிப்பூரில் என் இஷ்டப்படி நடந்து சந் தோஷப்படுத்தப் போகிறது அதை நினைத்தால் ரொம்ப வும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது...''

அவன் ரசனையோடு பேசி வார்த்தைகளை முடிக்க வில்லை.

''செருப்படி விழும்...'' என்றாள் நிர்மலா ஆத்திரமாக.

''செருப்படிகளா...? எனக்கா...?'' அவன் உதடுகளை வலித்துச் சிரித்தான்.

''பி... கொயட்... பேபி. ரொம்பவும் அவசரப்படு கிறாய்..! என்னை உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. உன்னுடைய பலஹீனம் தெரிந்து தான் உனக்கு வலை விரித்திருக்கிறேன்...''

வலை விரித்திருக்கிறானா? பலஹீனமா? என்ன சொல்கிறான் இவன்? புரியாமல் நிர்மலா அரண்டு பார்க்க... நிதானமாய் சிகரெட் பற்ற வைத்தவன். புகைகளை விசிறியவாறு அவளைப் பார்த்தான்.

''உன்னுடைய பலஹீனம்... புரியவில்லை... இன்னும் உன் ஞாபகத்திற்கு வரவில்லை? உன் அம்மா! நோய் வாய்ப்பட்ட அம்மா! புரிகிறதா...? இப்போது உனக்குப் புரிந்திருக்குமே?''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு சுரீரென உரைத்தது. 'பெரிய பரோபகாரி போல் ஒரு லட்சம் கொடுத்து உதவி செய்ததும் ஏதோ ஓர் திட்டத்துடன் தானா!'

அவள் திடுக்கிட.... ராஜா தொடர்ந்தான்.

''ஊரில் எந்த இளிச்சவாயனாவது இப்படி ஒரு லட்சத்தை தூக்கி முன் பின் தெரியாத ஆளுக்குக் கொடுப்பானா? அப்படிக் கொடுத்தால் அதில் ஏதாவது நோக்கம் இல்லாமல் இருக்குமா? கொஞ்சம் யோசித்துப் பார்...''

அவள் பயந்து வெலவெலப்புடன் பார்க்க அவளை நோக்கி தன் சுட்டு விரலை நீட்டினான்.

''எனது நோக்கம் நீ! உனது அபார அழகு கொண்ட உடம்பு! அதனாலே உனது அருமை டிரங்கு மாமா கேட்டதும் உடனே ஓ.கே. செய்துவிட்டேன். பணத்தைக் கொடுத்து விட்டேன்...!''

''மா.. மாவிற்கு இது தெரியுமா...?'' கேட்ட அவள் குரல் நடுங்கியதை அதிசயமாய்ப் பார்த்தான்.

''தெரியாதுதான்! ஆனால், நீதான் சொல்லப் போகிறாயே!'' என்றான் மறுபடியும் சாதாரணமாய்.

''என்ன நான் சொல்லப் போகிறேனா?''

அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''உனக்குத்தான் வேறு வழி இல்லையே! மறுபடியும் அவன் கைகளை அகல விரித்து வெடிச்சிரிப்பு சிரித்தான்.

நிர்மலாவைக் கோபமும், ஆத்திரமும் ஒருசேர தாக்கியது. மேலும், அவள் எதையோ கோபமாய் சொல்ல வரப் போக... அவசரமாய் தடுத்தான்.

''ஸ்டாப் இட்...? இது ரோடு. எதுவானாலும் நம் பங்களாவில் போய் பேசிக் கொள்வோம்... வா..! கமான்...!''

அவன் மறுபடியும் அப்படி உரிமையுடன் அழைத்தது அவளுள் ஆத்திரத்தைக் கிளப்பியது.



''நான் வரமாட்டேன்...'' என்றாள் தீர்மானக் குரலில்.

''பிடிவாதமா? ஆல் ரைட்! அப்புறம் என்ன செய்யப் போகிறாய்?''

''உடனே... அடுத்த ரயிலில் சென்னைக்குத் திரும்பப் போகிறேன்...''

''தாராளமாக..''

அவன் தோள்களை குலுக்கியவன் முகம் நிமிர்த்தி நேருக்கு நேராய் அவளைப் பார்த்தான்.

''நீ அப்படிச் செய்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா? அதையும் தெரிந்து கொள்...''

காது மடல்கள் அதிர அவள் பார்க்க அவன் ரொம்பவும் இயல்பாய் தொடர்ந்தான்.

''உடனே என்னுடைய சென்னை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு உன் தாயாருக்கு கட்டி வரும் மருத்துவச் செலவுகளை நிறுத்தச் சொல்வேன். கட்டிய பணம் முழுவதையும் திரும்பி வாங்கிக் கொள்வேன். போதாக் குறைக்கு உன் டிரங்கு மாமாவிடம் வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறேன். அதை வைத்து ஏதாவது பொய் டாக்குமெண்ட் எழுதி போலீஸில் புகார் கொடுத்து உன் குடும்பத்தையே கம்பி எண்ண வைத்துவிட நினைத்திருக்கிறேன். என்ன செய்யட்டுமா?''

மூச்சு விடாமல் படபடவென அவன் பேசிவிட்டு சிரிப்புடன் நிறுத்த அரண்டு போனாள் நிர்மலா!

'என்ன ஒரு நயவஞ்சகன்! எவ்வளவு பெரிய ஏமாற்றுக்காரன்! எவ்வளவு கவனமாய் திட்டம் தீட்டி வலை விரித்திருக்கிறான்!

இவனை நம்பி.. மாமாவைப் போல் நாமும் ஏமாந்து மணிப்பூர் வரை வந்து விட்டோமே!'

ஒருபுறம் அம்மாவின் உயிர்! மறுபுறம் அவளது உடம்பு! இரண்டையும் வைத்து என்னமாய் பிளாக் மெயில் பண்ணுகிறான்..? ஒத்துக் கொள்ளாவிட்டால்... குடும்பத்தையே கம்பி எண்ண வைத்து சீரழித்து விடுவேன் என்கிற மிரட்டல் வேறு!

என்ன செய்வது? இந்தக் கொடுமைக்காரனிட மிருந்து எப்படி தப்பிப்பது? அவள் மேலும் யோசிப் பதற்குள் அவனது இறுகிய முகம் அவள் பக்கத்தில் வந்தது.

''ஒன்றும் அவசரமில்லை! நிதானமாய் யோசித்து நிதானமாய் முடிவெடுக்கலாம். உனக்கு ஒரு நாள் டயம் தருகிறேன். என் பங்களாவிற்கு வந்து யோசி! அதுவரை என் விரல் நகம்கூட உன்னைத் தீண்டாது ஓ.கே. கிளம்பலாமா?''

சொல்லிவிட்டு விறுவிறுவென நடந்தான். தயாராய் தனக்கு வந்து காத்திருந்த அலுவலக காரில் ஏறிக் கொண்டான். காரின் பின் கதவுகளை அவளுக்காகத் திறந்து விட்டான்.

கோயில் கொடை விழாவிற்கு செல்லும் பலி ஆடு போல், மெல்ல ஏறி அமர்ந்தாள் நிர்மலா.



# 6

கார் கிளம்பியதும் ராஜா டிரைவரிடம் மணிப்பூர் மொழியில் ஏதோ சொல்லிவிட்டு அவள் பக்கம் திரும்பி னான்.

நிர்மலாவோ வேண்டுமென்றே அவன் பக்கம் திரும்பாமல் வேறு புறம் பார்த்துக் கொண்டிருந்தாள். நயவஞ்சகன்! இவனைப் பார்ப்பதே பாவம்தான்!

ஆனால், ராஜா அவளை ஒரு கணம் உற்று நோக் கியவன், ''உன் மனநிலையை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு நான் சொல்வதை கொஞ்சம் கேட்கி றாயா?'' என்றான்.

அவள் அதற்கும் பேசாமல் அப்படியே இருக்கவும், தோள்களை குலுக்கியவன், ''நீ கேட்கிறாயோ... இல் லையோ... சொல்ல வேண்டியது என் கடமை. சொல்லி விடுகிறேன். விருப்பமிருந்தால் உன் மூளையில் ஏற்றிக் கொள்...'' என்றபடி தொடர்ந்தான்.

''நாம் இப்போது இருப்பது மணிப்பூரின் தலைநகர மான இம்பாலில். இது நகரின் மலைகள் சூழ்ந்த வளமான சமவெளிப் பகுதி. இங்குதான் எனது கம்பெனியின் சாயத் தொழிற்சாலை இருக்கிறது. இதற்காகவே பல சாயச் செடிகளை பயிரிட்டு வளர்க்கிறோம். இங்கு தயாராகும்

சாயங்களை பெரும் டெக்ஸ்டைல் யூனிட்களுக்கு விற்று வருகிறோம். அதனால் பல லட்சங்கள் லாபமாய்...''

அவன் வார்த்தையை முடிப்பதற்குள் முந்தியவள், ''அந்த லட்ச லட்ச லாபங்களைக் கொண்டு என் போன்ற பெண்களின் வாழ்க்கையை கொடூரமாய் சீரழிப்பீர்கள்...'' என முடிக்கவும் செய்தாள்.

அவள் கோபத்தை அவன் வழக்கம்போல் ரசிக்கவில்லை. அவனுக்கும் கோபம் வந்தது.

''ஷ்...! சொல்கிறேன் அல்லவா? இடையில் பேசக்கூடாது!'' என அதட்டினான்.

''இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படுவதில்லை.''

''இல்லை. நீ பயப்படத்தான் போகிறாய். உனக்கு வேறு வழியில்லை...''

உறுதியாய் அவன் சொன்னபோது அவளால் எதிர்த்துப் பேசவும் முடியவில்லை. உண்மையும் அதுதானே? எப்படியாவது தாயாருக்கு மருத்துவ சிகிச்சை செய்து தாயின் உயிரைக் காப்பாற்றத்தானே துடியாய் துடித்தாள்?

அந்த துடிப்பில்தானே ஒரு லட்சம் தருகிறேன் என்றதும் யார், என்ன எந்த மாதிரியான வேலை? என்றுகூட விசாரிக்காமல் உடனே ஒப்புக் கொண்டாள். ஆனால் இப்படி ஊர் விட்டு ஊர் வந்து வேசித் தொழில் பார்க்க அல்லவா இவன் அழைக்கிறான்? சை! அருவருப்புடன் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.



அந்த அருவறுப்பிலே காரின் வெளியே தென்பட்ட பழங்கால மணிப்பூர் அரண்மனையை 'பானக்' உடையும், பெரிய பெரிய காதணிகளுமாக வந்த மணிப்பூரி பெண்களை, பார்ப்பதில் லயிப்பில்லாமல் போயிற்று.

கொஞ்ச நேரத்தில் கார் மரங்கள் சூழ்ந்த ஒரு பெரிய காம்பௌண்டினுள் நுழைந்தது. அதன் நடுவே பளபளப்புடன் அவனது பங்களா! பெரும் தாஜ்மகாலைப் போல சுவரெல்லாம் மொசைக் கற்கள். பல வண்ண வேலைப்பாடுகள் பெண்களை இது போன்று அழைத்து வந்து சல்லாபிப்பதற்கே கட்டிய ஆடம்பர மாளிகையோ!

அவள் நினைத்தது போலவே பங்களா முழுவதும் பணக்காரத்தனம் தெரிந்தது. பலவித அலங்காரப் பொருட்கள், விதவிதமான இருக்கைகள், வண்ணமயமான விளக்குகள், தொடர்ந்து கொண்டே போகும் விசாலமான அறைகள்... எல்லாவற்றையும் பிரமிப்புடன் பார்த்தபடி நிர்மலா நுழைந்தாள். கூடவே ஆத்திரமாகவும் நினைத்தாள்.

'படுபாவி பணத்தை வாரியிறைத்திருக்கிறான். எவ்வளவு லட்சங்கள் செலவாகி இருக்கும்? இதில் கேவலம் ஒரு லட்சத்திற்காக அவள் உடம்பையல்லவா விலை பேசுகிறான்!

ராஜா முன்னால் நடந்தவன் மெல்லிய பச்சை வண்ண அறை ஒன்றில் நின்றான். ''நிர்மலா, இது உன்னுடைய அறை. உள்ளே உனக்குத் தேவையான எல்லா வசதிகளும் இருக்கிறது. அரை மணி நேரத்தில் குளித்து ரெடியாகி, முன் டைனிங் ஹாலுக்கு வா. காலை உணவை சாப்பிட்டபடி நாம் பேசுவோம். உன்னிடம் நான் நிறைய பேச வேண்டியிருக்கிறது...''

சொல்லியவன் அவன் பதிலுக்குக் காத்திராமல் விறுவிறுவென அகன்றும் போனான்.

அவன் அகன்றதும் ரூமினுள் நுழைந்த நிர்மலா அப்படியே தலையைப் பிடித்தபடி உட்கார்ந்து விட்டாள்.

ரொம்பவும் தீவிரமாய் யோசித்தாள். யோசிக்க யோசிக்க அவளை விழ வைத்திருப்பது புரிந்தது.

சென்னையிலோ... ரயில் பயணத்திலோ சொல்லாமல் மணிப்பூரில் காலடி வைத்ததும் விஷயத்தை உடைக்கிறான். அவசரப்படுத்தாமல் நிதானமாய் யோசி என்கிறான். நான் சொன்னதை கேட்பதைத் தவிர வேறு உனக்கு வழியில்லை என்று மூளையில் அறைவது போல் புரிய வைக்கப் பார்க்கிறான்.

ஆனால்...

ஏதாவது வழி இருக்கக் கூடும்! இந்த இக்கட்டில் இருந்து தப்பிக்க அவன் மனநிலையை மாற்ற ஏதாவது செய்தால் என்ன? அந்த மாதிரி பெண் நானல்ல... என்று அவனுக்குப் புரிய வைத்தால் என்ன...?

ஒருவேளை அவன் மனம் மாறக் கூடும். அவனிடம் பணமிருக்கிறது. காசை விட்டெறிந்தால்... எத்தனையோ அந்த மாதிரிப் பெண்கள் ஓடி வருவார்கள். அவர்கள் போதாதா அவனுக்கு?

நம்பிக்கையோடு நினைத்துப் பார்த்த நிர்மலா மறு நிமிடமே அவன் சொன்னபடி குளித்து முடித்து தயாரானாள். அரைமணி நேரத்தில் அவன் சொன்ன டைனிங் ஹாலுக்குச் சென்றாள்.

டைனிங் டேபிள் முன் அவள் வருகைக்காகத் தயாராகக் காத்திருந்தான். அவன் இம்முறை கறுப்பும்,



வெள்ளையும் கலந்த ஃபுல் சூட்டில் இருந்தான். பெரிய பரோபகாரி போல நெஞ்சுப்பக்கம் ரோஜா மலர் வேறு!

அவளைப் போலவே அவனும் பார்வையால் அவள் உடல் முழுவதையும் வருடினான். ''இந்த வெளிர் நிற சைனா சில்க் உனக்கு கச்சிதமாய் உன் உடம்பழகை கூட்டுகிறது'' என்று பாராட்டுப் பத்திரம் படித்தான்.

அவள் சிறிதும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் எதிர் இருக்கையில் உட்கார்ந்தாள்.

நின்று கொண்டிருந்த பணியாளை போகச் சொல்லி விட்டு அவள் பக்கம் திரும்பினான். ''உனக்காக நிறைய ஸ்பெஷல் வகை உணவுகளை தயாரிக்கச் சொல்லியிருந்தேன். தண்டூரி, சிக்கன், பட்டாணிப் புலவு, நட்சால்ட், நூடூல்ஸ் இன்னும்...''

அவன் வரிசையாய் அடுக்கிக் கொண்டு போக, ''அதெல்லாம் வேண்டாம். ப்ரெட் டோஸ்ட் போதும்'' என முன்பிருந்த வறுத்த ப்ரெட் ஸ்லைசை எடுத்துக் கொண்டாள்.

''ஓ.கே.!'' அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''முக்கியமாய் ஒன்று பேச வேண்டும்...'' இழுத்தவாறு அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் கையில் பெரிய சிக்கன் துண்டு எடுத்து சுவாரஸ்யமாய் கடிக்க ஆரம்பித்திருந்தான். அதிலிருந்து பார்வையை விலக்காமலே மேலே சொல்லும்படி சைகை செய்தான்.

''நான் அந்த மாதிரி பெண் இல்லை...'' என்றாள் அழுத்தமான குரலில்.

அவன் கொறிப்பதை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

''அந்த மாதிரி என்றால்...?''

''நீங்கள் நினைக்கிற மாதிரி.''

அவன் வேண்டுமென்றே முகத்தை புரியாதது போல் வைத்துக் கொண்டு, ''புரியவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு'' என்றான்.

வந்த ஆத்திரத்தை பற்களை கடித்து அடக்கிக் கொண்டாள்.

''காசிற்காக உடம்பை விற்பார்களே... அது போன்ற பெண்கள்..''

''ஓ விபச்சாரி! அவர்களைச் சொல்கிறாயா? அவர்களுக்கென்ன...?'' என்றான் திரும்பவும் அப்பாவி போல்.

இவன் வேண்டுமென்றே விளையாடுகிறான். இவன் மர மண்டைக்கு உடைத்துச் சொன்னால்தான் உரைக்குமோ என வெகுண்டவள், ''நான் அந்த மாதிரி உடம்பை விற்கிற பெண் இல்லை!'' என்றாள் ஆத்திரமாக.

''இருக்கட்டுமே. நான் அப்படிச் சொல்லவில்லையே!'' என்றான் அவன் சர்வ சாதாரணமாக.

அவள் புரியாமல் விழித்ததும், ''நான் உன்னை விரும்புவதற்கு காரணமே நீ அது போன்ற பெண்ணாய் இல்லாமல் இருப்பதால்தானே...'' என விளக்கவும் செய்தான்.

அவளுக்கோ பற்றிக் கொண்டு வந்தது. ஆனால் தான் சொல்ல வந்ததையெல்லாம் அவனிடம் சொல்லியாக வேண்டும் என்ற பொறுமையில் வந்த ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டாள்.



''நான் அப்படிப்பட்ட பெண்ணாய் இல்லாமல் இருப்பதால் உங்களுடைய ஆசைக்கு உடன்பட முடியாத நிலையில் இருக்கிறேன்..'' என்றாள் சாதாரண குரலில் அழுத்தம் திருத்தமாக.

''அப்படியா?''

அவனது புருவங்கள் உயர்ந்து வியந்தது. ஒரு கணம் அவளையே, உற்றுப் பார்த்தவன், ''வேங்கைப் புலி இரை தேடும் முறை பற்றி ஒரு கதை உண்டு. உனக்குத் தெரியுமா?'' என்றான்.

அவள் பேசாமல் இருக்கவும், அவனே மேற்கொண்டு சொல்ல, ஆரம்பித்தான்.

''வேங்கைப் புலி ஒன்று இரவு குகையை விட்டு இரை தேடிக் கிளம்புகிறது. அதற்கு பயங்கர பசி. இரண்டு, மூன்று நாளாய் எந்த இரையும் சிக்கவில்லை. இன்று எப்படியும் இரையைப் பிடித்தாக வேண்டும் என்கிற வெறி. சுற்றும் முற்றும் பார்க்கிறது. தன் பெரும் பசியை தணிக்கும் அளவிற்கு எதிரில் ஒரு விலங்கும் காணவில்லை. மலையின் உச்சியில் நின்று பார்க்கிறது. ஒன்று கூட அதன் கண்களுக்கு புலப்படவே இல்லை. வருந்திய உள்ளத்தோடு மலையின் அடிவாரத்திற்கு மெல்ல இறங்கி வருகிறது. மரங்களும், செடிகளும், கொடிகளும், புற்களும் நிறைந்த காட்டிற்குள் நுழைகிறது. திரும்பிய பக்கங்களெல்லாம் இரைக்காக பார்த்துக் கொண்டே செல்கிறது. நெடுந்தொலைவு வந்ததும் பயனில்லையே என்று வருத்த முறுகிறது. மேலும் நடக்க வலிமையற்று அங்கேயே நிற்கிறது. சற்று நேரத்தில் புலி இருப்பதை அறியாத காட்டுப்பன்றி ஒன்று, அப்பக்கமாக வருகிறது.

அதன் வருகையறிந்த புலி, விரைந்து பாய்ந்து அப்பன்றியை ஓங்கி அடித்தது.

புலியின் அடியைத் தாளாமல் அந்த பன்றி உணர்ச்சியற்றுப் போய் புலியின் இடப்பக்கம் விழுந்தது. அப்படி இடப்பக்கம் விழுந்ததாலே புலி பயங்கர பசியிலிருந்தும் அந்த இரையை உண்ணாமலே போயிற்று...''

அவன் நிறுத்திவிட்டு அவளுக்கு ஏதும் புரிகிறதா என்பதுபோல் அவன் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

நிர்மலா உணர்ச்சியற்று இருக்கவும் அவனே விளக்கமும் கொடுத்தான்.

''புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்று ஒரு பழமொழி உண்டு அல்லவா..? அது போல புலி வலப்பக்கம் விழுந்த விலங்கையன்றி இடப்பக்கம் விழுந்த இரையை புலி என்றுமே உண்ணுவதில்லை என்ற கூற்றும் உண்டு.

தான் அடித்த ஓரடியில், எந்த விலங்கும் விழுந்துவிட வேண்டும். அதுவும் தனக்கு இடப்பக்கம் விழக்கூடாது. அப்படி விழுந்துவிட்டால் தனக்கு வலிமை குன்றி விட்டதாய் தனக்கு வீரம் போய் விட்டதாய் புலி எண்ணிக் கொள்ளும். அப்படி நிகழ்ந்து விட்டால் அன்றைய பொழுது முழுதும் அது எந்த உணவையும் உண்ணாது.

அப்படியே அன்று பட்டினி கிடந்து மறுநாள் காலையே வெறியுடன் உணவைத் தேடிச் சென்று எதிர்ப்பட்ட மிருகம் எதுவாக இருந்தாலும் எவ்வளவு பலமாய் இருந்தாலும் அதை ஒரே அடியில் வீழ்த்தி வலப்புறமாய் விழச் செய்யுமாம். பின் சந்தோஷமாய் அந்த உணவை தின்று மகிழுமாம். இதுவே நான் கேள்விப்பட்ட வேங்கைப் புலி பற்றிய வீரக்கதை...''



அவன் நிறுத்திவிட்டு அவளை கெக்கலிப்பு பார்வையுடன் பார்த்தான்.

''இப்போது புரிகிறதா? வேங்கைப் புலி கதைபோல் தான் நம் கதையும். எவ்வளவு நாள் பசியோடு காத்திருந்து நான் விரும்பும் இரையான உன்னைக் கண்டு பிடித்து வலை விரித்து வீழ்த்தியிருக்கிறேன். அவ்வளவு சுலபத்தில் உன்னை விட்டுவிடுவேனா?'' என்றபோது அவனது குரல் கடுமையாய் உயர்ந்திருந்தது.

அதில் தொனித்த அதிகார கர்ஜனையைக் கண்டு உண்மையிலேயே அவனுக்கு நாம் இரையாகி விட்டோமோ என நடுங்கித்தான் போனாள் நிர்மலா.

# 7

நிர்மலாவிற்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. ராஜா கொடுத்த இருபத்தி நாலு மணி நேரம் கெடு முடிந்து விட்டது.

அவளது முடிவு பற்றி அவளும் ஒன்றும் சொல்லவில்லை. அவனும் கேட்கவில்லை. ஆனால், அன்று மதியம் ரங்கு மாமாவிடமிருந்து போன் வந்தது. நிர்மலா ஆவலாய் பேசினாள். அம்மாவின் உடல் நலம் மருத்துவ வசதிகளால் முன்னேறி வருவதைக் கேட்டு நிம்மதியடைந்தாள். மாமாவிடம் இங்கு உள்ள இக்கட்டான

நிலைமையை சொல்ல மனம் துடித்தது. ஆனால் கூடவே, நிலைமையை அவரிடம் சொல்வதால் என்ன பிரயோஜனம்? முடிவெடுக்க வேண்டியவள் அவள் தானே!

நிம்மதியும் குழப்பமுமாய் ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பியவள் எதிரே கைகளை கட்டியபடி ராஜா நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுத்தான் போனாள்.

ராஜா அவளையே ஓரக்கண்ணால் பார்த்தவன், ''அம்மாவிற்கு எப்படி இருக்கிறது?'' என்றான்.

''ப... ரவாயில்லையாம்...'' என்றாள் குரல் நடுக்கத்தோடு.

''மருத்துவ வசதிகள்... பணம் எதுவும் தேவைப்படுமா? போதுமா?''

''அடாடா... என்ன கரிசனம்...'' என ஒரு கணம் இகழ்ச்சியாய் நினைத்தவள் அவன் குரலில் தொனித்த கனிவைக் கண்டு வியக்கவும் செய்தாள்.

அவள் பேசாமல் இருக்கவே, ''உன்னிடம்தான் கேட்கிறேன். பணம் போதுமா? தேவைப்படுகிறதா...?'' என்றான் மீண்டும் உரத்த குரலில்.

''போதும்...''

அவள் சொல்லி முடித்ததும் தோள்களைக் குலுக்கியவன், ''சரி கிளம்புகிறாயா?'' என்றான் அதே அவசரத்தோடு.

''கிளம்பவா...? எங்கு? புரியாமல் அவள் வியக்கவும், ''எவ்வளவு நேரம் கூண்டுப் பறவை போல் உள்ளேயே அடைந்து கிடப்பாய்? வெளியே... நீ பார்க்க வேண்டிய



விஷயங்கள் நிறைய இருக்கிறது. வா...!'' கட்டளை போல் சொல்லியபடி ராஜா முன்னால் நடந்தான். அவள் எப்படியும் வருவாள் என்ற நம்பிக்கை போலும்.

நிர்மலாவும் தன் குழப்பமான மனநிலைக்கு அது தேவைதான் என எண்ணியவள் அவளைப் பின் தொடர்ந்தாள்.

டிரைவரை அனுப்பிவிட்டு ராஜாவே காரை டிரைவ் செய்தான்.

அடிக்கடி இங்கு வருவான் போலும்! மணிப்பூரின் அனைத்து இடங்களும், அத்தனை சாலைகளும் அவனுக்கு அத்துப்படியாய் இருந்தது.

நிர்மலாவுக்கு திடும்மென அந்த யோசனையும் உதித்தது. பேசாமல் இப்படி வருவதைவிட அவனிடம் பேச்சுக் கொடுப்பது நல்லது என நினைத்தாள்.

பேசப்பேச அவனது மனநிலையின் முழு பரிணாமத்தை புரிந்து கொள்ளலாம். முயற்சித்தால்... அதை மாற்றக்கூட முயலலாம்... என்ற நம்பிக்கை துளிர்த்தது.

''அடிக்கடி இங்கு வருவீர்களா?'' என்றாள் நிர்மலா பேச்சை ஆரம்பித்தவாறு.

''அடிக்கடி இல்லை. ஆறு மாதத்திற்கு ஒருமுறை...!'' என்றான்.

அவன் பெரும் சுவாரஸ்யத்தோடு.

அத்தோடு அவன் நிறுத்தியிருந்தால் நன்றாக இருக்கும். அவனோ விடாது, ''ஒவ்வொரு முறையும் ஒரு பெண்ணோடு..!'' என்று உபரியாய் சொல்லி அவளை எரிச்சல் படுத்தினான்.

கூடவே அவள் முகம் சிவந்ததை ரசித்தான்.

நிர்மலாவுக்கோ நேற்று அவன் சொன்ன 'வேங்கை புலி' கதை நினைவுக்கு வந்தது. புலிபோல் ஒவ்வொரு வருடமும் காத்திருந்து வலை விரித்து இரை பிடிக் கிறானோ? அப்படி இம்முறை அவன் விரித்த வலையில் இரை போல் அவள்... மாட்டியிருக்கிறாளோ?

மிரட்சியான தன்... பார்வையை ஏளனத்தோடு அவன் உற்று நோக்குவதைக் கண்டு மறுகணமே சிலிர்த்துக் கொண்டவளாய் நிமிர்ந்து கொண்டாள்.

ராஜா சிறிது தூரம் சென்றதும் காரின் வேகத்தைக் குறைத்து ஏறக்குறைய நிறுத்தியே விட்டான்.

நிர்மலா புரியாமல் வெளியே பார்த்தாள். கூட்டம் கூட்டமாய் மக்கள் சாலையின் இருபுறமும் உற்சாகமாய் கூடி எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்க... ராஜா காரை சாலையின் ஓரமாய் நிறுத்தி இறங்கினான்.

அவளையும் இறங்கும்படி சொன்னவன் புரியாமல் விழித்தவளிடம், "இன்று ரத யாத்ரா பண்டிகை. மணிப் பூரின் முக்கியமான பண்டிகை இது..." என்றான்.

"ரத யாத்ராவா?"

"ஆமாம். இந்தப் பண்டிகை இன்று தொடங்கி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடக்கும். இப்பண்டிகை யின்போது மணிப்பூர் மகாராஜாவின் அரண்மனைக் கருகில் ஜகந்நாதர், பலராமர், சுபத்ரா ஆகிய கடவுள்களின் திருவுருவங்கள் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்படும். பின்னர் அவை தேர் ஒன்றில் வைக்கப்பட்டு பக்தர்களால் ஊரைச் சுற்றி இழுத்து வரப்படும். இதுதான் ரத யாத்ரா..."



ராஜா சொல்லச் சொல்ல சுவாமியின் தேர் தரிசனத் திற்காக காத்திருக்கும் கூட்டத்தினரை நிர்மலா வியப் புடன் பார்த்தாள். நிறைய பேர் தலையில் குல்லா போன்று அணிந்திருந்தனர்.

அவள் அதிசயிப்பதைக் கண்ட ராஜா, "பண்டிகை நாள்களில் இப்படிக் குல்லாய் அணிவது அவர்களது வழக்கம்!" என்று விளக்கமும் கொடுத்தான்.

ஆண்கள் பெரும்பாலும் வேஷ்டி சட்டை அணிந் திருக்க... பெண்கள் வண்ணத் துணிகளாலான ரவிக்கையை யும் இடுப்புக்குக் கீழ் 'பானக்' உடையையும் அணிந் திருந்தனர். நெக்லஸ், மோதிரம், வளையல், காதணி போன்ற ஆபரணங்கள் பெரும்பாலான பெண்களிடம் மின்னியது.

கூட்டத்திலிருந்த ஒரு மணிப்பூரிப் பெண் ராஜாவிற்கு தெரிந்தவள் போலும்... அங்கிருந்து வந்து ராஜாவைப் பார்த்து ஸ்நேகமாய் சிரித்து பேசினாள். நிர்மலாவை கை காட்டி ஏதேதோ கேட்டாள்.

ராஜா புன்னகை மாறாமல் அவளுக்கு பதில் சொல்லி அனுப்பினான்.

அவள் சென்றதும் நிர்மலா பக்கம் திரும்பினான். "அவள் என்ன கேட்டு விட்டுப் போகிறாள் தெரியுமா?" என்றான்.

"என்ன?" என்பது போல் நிர்மலா பார்த்தாள்.

"நீ யார்... என்னுடைய மனைவியா? என்று அவளுக்கு சந்தேகம்! அந்த சந்தேகத்தை கேட்காவிட்டால் தலை வெடித்து விடும்போல் அவளுக்கு இருந்திருக்கிறது.

அதான் அவள் கேட்டதும் உடனே பதில் சொல்லி விட்டேன்...!'' என்றான் ராஜா சிரிப்பு பொங்க.

''என்ன பதில் சொன்னீர்கள்?'' என்றாள் நிர்மலா சிறிதும் உணர்ச்சியற்ற குரலில்.

ராஜா ஒரு கணம் சிரிப்பை நிறுத்தியவன் கண்களை இடுக்கி அவளை உற்றுப் பார்த்தான். அவனது மேல் தாடை அப்படியே இறுகியது.

''மனைவியல்ல... மனைவி மாதிரி... என்றேன்..!''

நிர்மலா பெரும் அதிர்ச்சியானாள்.

கயிற்றைப் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல கிணற்றிலிருந்து வெளி வந்தவள்... விளிம்புக்கு வந்ததும் மறுபடியும் கை நழுவி... அக்கிணற்றிலே.. விழுவது போல்....

ராஜாவின் வாக்கியம் சுரீரென மூளையில் அறைந்து அவளை கீழே தள்ளியது.

# 8

'மனைவி மாதிரி...' என்ற சொல் நிர்மலாவை ரொம்பவும் பாதித்து விட்டது. அதற்குப் பின் அவளால் ரதயாத்ரா விழாவை ரசித்துப் பார்க்க முடியவில்லை. ஏன், வீடு திரும்பும்வரை அவனிடம் பேசக்கூட இல்லை.



உம்மென்றுதான் வந்தாள். அவளது நடவடிக்கைகளை ராஜா உற்றுக் கவனித்தவன் பங்களாவில் காரை நிறுத்தி இறங்கியபோது, ''சிறு சிறு விஷயங்களுக்கு நீ ரொம்பவும் அப்செட் ஆகிறாய்..'' என்றான்.

''எது.. இதுவா சிறிய விஷயம்? மனைவி மாதிரி... என்றால் அந்த உறவுக்கு என்ன முறை? அவ்வளவு கேவலமானவளா நான்?''

அவன் பேசாமல் இருக்கவும், ''உன்னிடம்தான் கேட்கிறேன்...'' என்றாள் அழுத்தமாக.

''நீங்கள் மனைவி மாதிரி என்று சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை...'' என்றாள் அவளும் அழுத்தமாய்.

''ஏன் உள்ளதைத்தானே சொல்கிறேன்?'' என்றபோது வெகுண்டு கன்றிச் சிவந்த முகத்துடனே அவனை முறைத்தாள்.

''நான் உங்கள் திட்டத்திற்கு இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை...!''

''ஆனால், நான் உனக்குக் கொடுத்த இருபத்தி நாலு மணி நேர கெடு முடிந்து விட்டது. தெரியுமா?''

''அதனால்...?''

''வேறென்ன? மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று எடுத்துக் கொண்டேன்...''

அவன் சொல்லிவிட்டு விறுவிறுவென சென்று விட்டான். நிர்மலாவுக்கு ஒன்றும் ஓடவில்லை... எவ்வளவு சாதாரணமாக சொல்லிவிட்டான். அவள் அவ்வளவுதானா? கடைசியில் மணிப்பூரில் அவன்

உடம்புத் தேவைகளை பூர்த்தி செய்ய வந்தவளா? அப்படித்தான் ஆகிவிடப் போகிறாளா?

விடக்கூடாது.. என்பதுபோல் அவனையே பின் தொடர்ந்தாள். அவன் பங்களாவின் இன்னொரு பெரிய அறைக்குச் சென்று மியூஸிக்கின் சி.டி. பிளேயரை தட்டி விட்டபடி உட்கார்ந்தான்.

ஸ்பீக்கரில் மேற்கத்திய ட்ரம்ஸ் இசை ஒலிக்க ஆரம் பித்தது.

அவனுக்கு பிடித்த இசை போலும். கண்களை மூடி தலையை வெகுவாய் அசைத்தபடி ரசித்துக் கேட்க ஆரம் பித்தான்.

கேட்க ஆரம்பித்தவன் சரட்டென இருக்கையின் இழுப்புச் சத்தம் கேட்டு நிமிர்ந்தான்.

எதிரே ஒரு இருக்கையை நிர்மலா ஆத்திரத்துடன் இழுத்துப் போட்டபடி உட்கார்ந்திருந்தாள்.

அவள் அப்படி கோபமாய் இழுத்துப் போட்டு உட் கார்வதை கண்டதும் அவன் இதழ்களில் குறுநகை கூடியது.

வேண்டுமென்றே கையில் உள்ள ரிமோட்டின் ஸ்விட்சை மேலும் அழுத்தி, இசையின் வால்யூமை கூட்டினான். அலறும் சப்தத்தில் அவள் இருக்க முடி யாமல் எழுந்து ஓட வேண்டும் என்று அவனது ஆசை!

மெல்ல... மெல்ல உயர்ந்து... காது பிளக்கும்படி உச்சமான ஓசைக்கு கொண்டு வந்தான்.

நிர்மலாவால் அந்தப் பெரும் அலறலை, காதுகளில் அதிர்வாய் இரைந்த இசையை சகிக்க முடியவில்லை.



ஆனாலும் விடாப்பிடியாய் அவனிடம் பேசியே ஆக வேண்டும் என்பது போல் பற்களைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கையை மூடியிருந்த அழுத்தத்தில் விரல் நகம் உள்ளங்கையில் குத்திக் கிழித்து விடுமோ என்று கூடத் தோணியது.

அவன் அவளது தவிப்பை ரசித்து மேலும் மேலும் சப்தத்தை அதிகரித்தான். காதே கிழிந்து செவிடாகி விடுமோ என்ற நிலையில், அதற்கு மேலும் தாங்கவே முடியாத நிலையில் நிர்மலா எழுந்து விட்டாள்.

அவள் சகிக்க முடியாமல் எழுந்தது, அவனுக்கு பெரும் வெற்றியாய் இருந்திருக்க வேண்டும்.

சட்டென ரிமோட்டால் மியூஸிக்கை ஆஃப் செய்து வெற்றிக் களிப்புடன் அவளைப் பார்த்தான்.

என்ன ஒரு கொடூர ரசனை இவனுக்கு!

வியந்து பார்த்து அவள் திகைத்தபோது இருக்கையி லிருந்து எழுந்து, ''என்ன எதும் பேச வேண்டுமா?'' என்றான் கரிசனக் குரலில்.

''உட்கார் பேசுவோம்.''

நிர்மலா உட்காராமல் நின்றதும் அவள் பக்கம் வந்தான்.

''பேச வந்ததைப் பேசலாம்...''

நிர்மலா தன் ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டாள். பொறுமையாய் அவனைப் பார்த்தாள்.

''எனக்கு உங்கள் திட்டம் பிடிக்கவில்லை. என்னை விடுவித்து விடுங்கள்...'' என்றாள்.

''விடுவித்து விடவா?''

அவன் நிதானமாய் அவளை ஒரு சுற்று சுற்றி வந்து, "நீ உன் தாய் மீது வைத்திருக்கும் அன்பு, பாசம் அவ்வளவுதானா? விடுவித்து விடவா?" என்றான் மீண்டும்.

என்ன சொல்கிறான்... இவன்...! என அவள் திகைக்கும் போதே ராஜா விளக்கமும் கொடுத்தான்.

"நீ திட்டத்திற்கு ஒப்புக் கொள்ளா விட்டால் உடனே பணத்தை நிறுத்தி விடுவேன். உனது தாயாருக்கு செய்ய வேண்டிய மருத்துவ சிகிச்சைகள் உடனே நின்று போகக் கூடும். அதனால் அவர்களது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு..." ஒரு கணம் வார்த்தைகளை நிறுத்தியவன் பின் நிதானமாய், "ஏன்... அவர்கள் இறந்துகூட போகலாம் அல்லவா!" என வார்த்தைகளை முடித்தபோது அவளால் கொஞ்சமும் தாங்க முடியவில்லை.

"ச்சீ... வாயை மூடு!" என்றாள் ஆத்திரத்துடன்.

அவள் மரியாதையற்றுப் பேசியதைக்கூட பொருட்படுத்தாதவனாய் விடாது, "நான் சொல்வதை நன்றாக யோசித்துப் பார். உண்மைகள் புரியும். எல்லாவற்றையும் விட உன் தாயாரின் உயிர் இப்போது முக்கியம் தானே?" என்றான் மீண்டும் கரிசனக் குரலோடு.

"ஆடு நனைகிறது.. என ஓநாய் கண்ணீர் விட்ட கதையெல்லாம் எனக்குத் தெரியும்..." என்றாள் அவள் ஆத்திரமாக.

ஆனால், அவன் அதற்கும் புதுவிளக்கம் கொடுத்தான்.

"அந்தக் கதையில் ஓநாய் கண்ணீர் விட்டது. உண்மையோ இல்லையோ, ஆடு நனைந்தது உண்மை தானே? அதற்காக பரிதாபப்பட வேண்டும்தானே?"



அவள் பேசாமல் இருக்கவும் திரும்பவும் அவனே தொடர்ந்தான்.

"இதோ பார் நிர்மலா. இந்த உலகத்தில் ஒன்றைப் பெற ஒன்றைக் கொடுத்துதான் ஆக வேண்டும். அது உலக நியதி. அதை நீயோ, நானோ மாற்ற முடியாது. அதை புரிந்து கொள்..."

"முறை தவறி வாழும் வாழ்க்கை எனக்குப் பிடிக்காது. அதற்குப் பதில் என் உயிரையே விட்டுவிடுவேன்..." என்றாள், அவள் தாங்க முடியாத எரிச்சலோடு.

"தாராளமாய் விடு. ஆனால், அதனால் என்ன பிரயோஜனம்? உன் தாயாரின் உயிரைக் காப்பாற்ற முடியுமா என்ன?" என கேட்டு மறுபடியும் அவளை ஊமையாக்கினான்.

தொடர்ந்து, "உயிரையே விட்டுவிடத் துணிந்தவளுக்கு உடம்பு எம்மாத்திரம்? அதன் மேல் அப்படி என்னம்மா அக்கறை...?" என கரிசனக் கேள்வியும் கேட்டான்.

அதற்கு மேல் அவனுடன் அவளால் பேச முடியவில்லை. விடுவிடுவென வெளியேறினாள். தன் ரூமில் போய் கதவடைத்துக் கொண்டு படுக்கையில் விழுந்து விட்டாள்.

நீண்ட நேரம் கழித்து அவள் உணர்வுக்கு வந்தபோது... படுத்திருந்த தலையணைப் பகுதியில் ஈரத்தை உணர்ந்தாள். 'இவ்வளவு நேரம் அழுதோமா... என்ன?'

ஏன் கோழைபோல், அழுது நடுங்க வேண்டும்? பிரச்சினை எதுவானாலும் சந்திக்க வேண்டியதுதானே?

என்ன ஆனாலும் ராஜாவின் திட்டத்திற்குச் சம்மதிக்கப் போவதில்லை பின் என்ன பயம்?''

மறுகணமே வீறுகொண்டவளாய் நிமிர்ந்து கொண் டாள்.

அன்று இரவு உணவருந்தும்போது வேண்டுமென்றே ராஜாவின் முகத்தைப் பார்ப்பதை தவிர்த்தாள். அவனும் கையில் ஒரு ஆங்கில இதழை பிடித்தபடி அதை படிப்பதிலே கவனமாய் இருந்தான்.

உணவு முடிந்ததும் பங்களாவின் பின்புற தோட்டப் பகுதியில் வந்து நின்று கொண்டாள். தோட்டம் முழு வதும் வண்ண வண்ணப் பூக்களை தாங்கிய பலவிதச் செடிகள். சீராய் வெட்டப்பட்ட புல்வெளிகள் வானத்தில் அழகாய் வட்ட நிலவு.

அந்த நிலவின் வெள்ளொளியில் எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்தவள் பார்வையை மேல் நோக்கி நிலவைப் பார்த்தாள்.

களங்கமற்ற நிலவு தூய்மையாய் வெண்மை பரப்பிய படி அதுபேரில் தானே அவளது வாழ்க்கையும் சென்று கொண்டிருந்தது.

நடுவில் எங்கிருந்து முளைத்தான் இந்த ராஜா? தூய்மையான அவளை களங்கப்படுத்தி ரசிப்பதில் அப்படி அவனுக்கென்ன ஆனந்தம்!

அப்படியே யோசித்துக் கொண்டிருந்தவள் திடுமெ தன் பார்வையை கீழிறங்கியபோது திடுக்கிட்டாள்.

எதிரே... கைகளை கட்டியபடி ராஜா! அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.



அவன் தன்னையே விழுங்குவது போல பார்த்தது நிர்மலாவுக்கு பயமாகத்தான் இருந்தது. அவன் சொன்ன இரை தேடும் வேங்கைப்புலி கதையும் ஞாபகம் இருந்தது.

எதற்கு வந்திருக்கிறான்? புலி வேட்டைக்குப் புறப்படு வதைப் போல... இரை தேடி வந்திருக்கிறானா?

நிர்மலா அவனையே மிரட்சியுடன் பார்க்க ராஜா அவளை நெருங்கி வந்தான். வந்தவன் அவள் தோளில் உரிமையாய் கை வைக்கப் போனான்.

"ச்சே!'' வேகமாய் அவனது கையை தட்டியபடி நிர்மலா முறைத்தாள்.

"ஓ.. கை வைக்கக் கூடாதா? சரி ஓ.கே.! நான் உன்னை தொடவில்லை. நீயே என்னைத் தொடும்படியாக வைக்கிறேன்...'' என்றான்.

அவள் புரியாமல் விழித்ததும், "இன்னுமா உனக்குப் புரியவில்லை.? இந்த வண்டு மலரைத் தேடி ஒரு நாளும் செல்லாது. மலர்கள்தான் இந்த வண்டைத் தேடி வரும். அதை உனக்குப் புரிய வைக்கிறேன்.''

அவளை வியப்பில் ஆழ்த்திவிட்டு திரும்பி வேகமாய் சென்றான் அவன்.

# 9

மறுநாள் காலை குளித்து உணவு முடித்தபோது அவன் தயாராய் தோன்றி பேக்டரிக்கு வருகிறாயா?'' என்றான்.

நிர்மலா உடனடியாய் தலையசைத்தாள். இரவு முழுவதும் சிந்தித்ததில் அவன் மனதில் திட்டம் ஒன்றும் இருந்தது. அதை அவனிடம் பேசி செயலாற்ற வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தாள்.

காரில் அவனுடன் ஏறிக் கொண்டு புறப்பட்டாள்.

ராஜா காரை செலுத்தியவன் அவனாகவே பேச்சுக் கொடுத்தான். இம்பாலில் இருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் அவனுடைய சாயத் தொழிற் சாலையைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தான். அங்கு கிட்டத்தட்ட நூறு பெண்கள் வேலை பார்க்கிறார்களாம். குகம்லெய் என்று வயல்களில் பரவலாய் பயிரிடப்படும் செடியிலிருந்து விதவிதமான சாயங்களை உருவாக்கு கிறார்களாம். அந்த சாயங்கள் அங்கிருந்து பல்வேறு துணி நிறுவனங்களுக்கு லாரிகளில் அனுப்பப்படுகிறதாம்.

அவன் சுவாரஸ்யமாய் சொல்வதை லயிப்பில்லாமல் தான் கேட்டுக் கொண்டிருந்தாள் நிர்மலா.

ஒருவழியாய் அவன் முடித்ததும் காத்திருந்தவள் போல், ''தொழிற்சாலையைப் பத்தி சொன்னீர்கள். ஆனால், உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில் லையே?'' என்றாள்.

அவள் அப்படிக் கேட்டதும் முதன் முறையாய் அவன் முகத்தில் திடுக்கிடலொன்று தோன்றி, மறைந்தது.

புருவம் உயரப் பார்த்தவன், ''என்னைப் பற்றியா?'' என்றான் ஆச்சரியமாய்.

''ஆமாம். உங்களைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்ள எனக்கு ஆர்வமாயிருக்கிறது...''



ராஜாவிற்கு அது ரொம்பவும் அதிசயமாகத் தெரிந்தது.

ஆர்வம்? அதுவும் என்மீது? அவன் மீண்டும் நம்ப முடியாமல் உற்றுப் பார்த்தான்.

சொல்வது நிஜம்தான் என்பதுபோல் அவளும் கண்கள் அகல விரித்துப் பார்த்தாள்.

முதல் முறையாய் ராஜாவின் உதடுகளில் இகழ்ச்சி யான புன்முறுவல் ஓடுவதை நிர்மலா கவனித்தாள்.

''எனது வாழ்க்கையே வேடிக்கையான விநோதமான திருப்பங்கள் நிறைந்ததுதான்! என் தந்தை பரம்பரை கோடீஸ்வரர். சிறு வயதிலே தாயாரை இழந்து விட்டேன். வேலைக்காரர்களின் பராமரிப்பிலே வளர்ந்தேன். வாரம் ஒரு முறை எனக்காக நேரம் ஒதுக்கி என்னுடன் அன்பாக ஓரிரு வார்த்தைகள் பேசுவதே என் தந்தையால் முடியாத காரியமாயிற்று...''

''ஏன்? உங்கள் மீது அன்பில்லையா அவருக்கு?''

''அப்படியல்ல.. அவருடைய பணிகள் அப்படி. பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற வெறி. நேரம் பார்க்காமல் உழைத்து மலைபோல் பணத்தை குவித்தார். கடைசியில் விமான விபத்து ஒன்றில் சிக்கி தன் உயிரையும் இழந்து விட்டார். அவரது ஒரே வாரிசான நான் இருபது வயதிலே அவரது மொத்த தொழில்களையும் நிர்வகிக்கும் முதலாளி ஆனேன்...''

''தலைகால் புரியாது என்பார்களே... அப்படித்தானே அந்த இளம் வயதில் நிறைய தொழில் நிறுவனங்களை கோடிக் கணக்கில் புரளும் பணத்தைப் பார்த்ததும், எனக்கு ஏற்பட்டது. அப்போதுதான் என் தந்தையின்

உழைப்பு எத்தகையது என்பதை முழுமையாய் புரிந்து கொண்டேன். அப்போதுதான் என் வாழ்க்கையில் பெரிய விபத்தொன்றும் ஏற்பட்டது.'' சொல்லிவிட்டு ராஜா நிறுத்தினான்.

''விபத்தா...?''

''ஆம். அந்த விபத்தின் பெயர் காதல்...''

''என்ன காதலா...? வியப்பாய் கேட்டவளை இயல்பாய் பார்த்தான்.

''என்ன.. இந்த மூஞ்சியை எந்தப் பெண்ணாவது விரும்புவாளா... என்று பார்த்தாயா? ஒன்று... இரண் டல்ல... மூன்று பெண்கள். மூன்று பெண்கள் என்னைக் காதலித்தார்கள் தெரியுமா?''

''ஒரே நேரத்தில் மூன்று பேர்களா?''

இம்முறை ராஜா சிரித்தான். ''ஒரே நேரத்தில் அல்ல ஒரு காதல் முடிந்து... செத்து விட்ட பிறகு கொஞ் நாளில். மற்றொரு பெண்... மற்றொரு.. காதல் இப்படியே தொடர்ந்து மூன்று பேர்... மூன்று பெண்கள்...''

''என்னாயிற்று..?''

''ஏமாற்றம்தான்! கடைசியில், மூன்று பேரும் என்னை ஏமாற்றி விட்டனர்...'' என்றான் ராஜா வெறுப்பு பொங்க

''என்ன மூன்று பேருமா?''

அவள் மறுபடியும் திடுக்கிட அவன் ஆமோதிப்ப னாய் தலையசைத்தான்.

''எப்படி இது சாத்தியம்? நம்பக் கூடியதாய் இ லையே...!''



''நம்புவது கஷ்டம்தான். ஆனால், உண்மை. அதுதான் மூன்று பேரும் என்னைக் காதலித்தார்கள். ஆனால், என்னைவிட என்னுடைய பணத்தை அதிகம் நேசித் தார்கள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. அது எனக்குத் தெரிந்தபோது என்னால் தாங்க முடியவில்லை. பணத்தை வீசியெறிந்து அவர்களை விரட்டி விட்டேன்.''

அவன் சொல்லிவிட்டு நிறுத்தினான்.

அவள் அவனையே புரியாமல் பார்த்தாள்.

''விரட்டி விட்டீர்கள் சரி... பணம் எதற்கு கொடுத் தீர்கள்...?'' என்றாள் அப்பாவியாய்.

ராஜா ஏளனமாய்ச் சிரித்தான்.

''அவர்கள் செய்த வேலைக்கு கூலி.''

''வேலையா?''

''ஆம்.. படுக்கையில் என்னுடன் இருந்தார்கள் அல்லவா. அதற்கான கூலி.''

''ச்சீ... வெட்கம் கெட்டவர்கள்! அடக்க முடியாமல் எரிச்சலுடன் முணுமுணுத்தாள் நிர்மலா.

ராஜா அவளது எரிச்சலை ரசித்துப் பார்த்தவன், ''இதே எரிச்சல் இதே கோபம்தான் எனக்கும் வந்தது...'' என்றான்.

அவள் பேசாமல் இருக்கவும், ''யார் மீது தெரியுமா? பெண்கள் மீது...! அதுவும் காசிற்காக இப்படி வேஷம் போடும்...''

''............''

''அப்போதுதான் அந்த முடிவும் எடுத்தேன்...''

''முடிவா?''

''ஆமாம். இனி காசை விட்டெறிந்து பெண்களை வேட்டையாடுவது என்று தீர்மானித்தேன். அதன்படி ஒவ்வொரு பெண்ணாய்...''

அவன் சொன்ன 'வேட்டையாடு...' வார்த்தை அவன் சொன்ன 'வேங்கைப்புலி இரை தேடும் கதை'யை அவளுக்கு ஞாபகப்படுத்தியது.

அந்த பயத்திலே மெல்ல திரும்பி அவன் பக்கம் பார்த்தாள்.

கோவைப் பழமாய் செக்கச் சிவந்த விழிகளுடன், ஏறக்குறைய ஒரு புலியின் சீற்றத்துடன் அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

இவனையாவது, பேசித் திருத்துவதாவது? என்ற பயம் அவளுள் மெல்ல எழுந்து கொண்டிருந்தது.

# 10

அதற்கு மறுநாள் சென்னையிலிருந்து டிரங்கால் என்றதும் நிர்மலா பதறித்தான் டெலிபோன் பக்கம் ஓடினாள். போனில் அவள் நினைத்தது போலவே ரங்கு மாமாதான்! அவர் குரலில் எக்கச்சக்க பதட்டம்.

''அம்மாவுக்கு முக்கியமான இஞ்செக்ஷன் ஒன்று போட வேண்டுமாம். அது வெளிநாட்டில் தயாரிக்கப்படுகிற



தாம். அதன் விலை பத்தாயிரம் ரூபாயாம். உடனடியாக பணத்துக்கு ஏற்பாடு செய்தால்தான் அம்மாவை பிழைக்க வைக்க முடியுமாம்..!''

மாமா பதறிச் சொன்னபோது அவளும் பதறத்தான் செய்தாள். உடனடியாக பத்தாயிரம் வேண்டுமாம்! வேறு எங்கு போவது? ராஜாவிடம் கேட்பதைத் தவிர வேறு வழிதான் இல்லையே!

மாமாவிடம் பணத்துக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லி ரிசீவரை வைத்துவிட்டு ராஜாவைத் தேடிப் போனாள்.

ராஜா அவள் வரவை எதிர்பார்த்தவன் போல் முன் ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்தான்.

அவன் கைகளில் புசுபுசுவென சடை முடிகளுடன் அந்த புதிய நாய்க்குட்டி.

படபடப்புடன் வந்தவளிடம், ''பார்த்தாயா... புதிதாய் வாங்கியிருக்கிறேன். பொமரேனியன் வகை, ரொம்பவும் சமத்து...!'' என்றான் உற்சாகமாய் நாயை காட்டியபடி, ''நான் ஒரு முக்கியமான விஷயம்...'' என்று ஆரம்பித்தாள் நிர்மலா.

அவள் சொன்னது காதில் விழாதது போல் அவன் தொடர்ந்தான்.

''நிர்மலா, இந்த நாய் அப்படியே சொன்னதைச் செய்யும் பார்க்கிறாயா?'' என்றபடி பக்கத்திலிருந்த சிறிய பிளேட் ஒன்றை எடுத்து தூரமாய் வீசினான்.

''டேக் இட்!'' என்றான்.

அவன் ஆணையிட்டதும் பொமரேனியன் துள்ளிக் குதித்து ஓடி அந்த பிளேட்டைக் கவ்விக் கொண்டு வந்தது.

நிர்மலா பொறுமையிழந்தவளாய், ''அம்மாவுக்கு உடல்நிலை...'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

அவன் வேண்டுமென்றே காது கேளாதவன் போல, ''அப்புறம்... இதற்கு என்ன பெயர் வைக்கலாம். நீயே சொல்லேன். ஏதாவது அழகான பெண்ணின் பெயர்.. நீலா, பிங்கி, ட்விங்கிள், சீஸர், ரோஸி...'' என விளித்தவன்...

''ரோஸி... நல்ல பெயர். உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என கேட்கவும் செய்தான்.

நிர்மலா பற்களைக் கடித்து உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டாள். இனியும் பொறுக்க முடியாதவள்போல, ''அம்மாவிற்கு இஞ்செக்ஷன் ஒன்று...'' என உரத்த குரலில் ஆரம்பித்து விட்டாள்.

அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே, ''எனக்குத் தெரியும். பத்தாயிரம் பணம் வேண்டும். அப்படித் தானே?'' என அவன் முடித்தும் வைத்தான்.

'என்ன தெரியுமா! தெரிந்துதான் விளையாடுகிறானா?'

அவள் வியந்து பார்க்க, ''காலையிலே மருத்துவ மனையிலிருந்து டாக்டர் போன் செய்து விட்டார்...'' என்றான் சாதாரண குரலில்.

''என்ன பதில் சொன்னீர்கள்...?''

''என்ன பதில் சொல்ல வேண்டும்?'' கேட்டவளிடமே எதிர் கேள்வி கேட்டான்.

நிர்மலா இதை எதிர்பார்க்காததால் பதில் சொல்ல முடியாமல் ஸ்தம்பித்து நின்றாள்.

அவன் நிதானமாய் எழுந்து கைகளில் பொமரேனி யனை வருடியவாறு அவள் பக்கம் வந்தான்.



''பார், இந்த நாய்க் குட்டியை விலை கொடுத்து வாங்கினேன். இப்போது இதோடு விளையாடி சந் தோஷத்தை அனுபவிக்க முடிந்தது... ஆனால் சில பொருள்களை விலை கொடுத்து வாங்கினாலும் அதை அனுபவிக்க முடியாமல் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கிறதே...''

அவன் எதை குத்திச் சொல்கிறான் என்று அவளுக்குப் புரியாமல் இல்லை. ஒருபுறம் பலஹீனத்தை வைத்து ப்ளாக்மெயில் செய்யும் அவனது குணத்தைக் கண்டு ஆத்திரமாகவும் வந்தது.

ஆனாலும், பற்களைக் கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

அம்மாவின் உயிராயிற்றே! அதில் போய் விளையாடு வதாவது...?

அவன் நிதானமாக அவள் முன் வந்து நின்று கொண்டான். மை தீட்டிய அவளது விழிகள் விரிந்து தன்னையே படபடப்புடன் பார்ப்பதை ரசித்தான்.

''நான் கேட்டு விட்டேன். பதில சொல்ல வேண்டியது உன் பொறுப்பு. உன் பதிலை வைத்துதான் நான் அவசியத் தேவையான பத்தாயிரத்தை கொடுக்கவா வேண்டாமா.. என்று முடிவெடுக்க வேண்டும்...''

அவன் சொல்லி முடித்துவிட்டு அவளையே கூர்ந்து பார்த்தான்.

நிர்மலாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் சமாளித்தவளாய், ''நான் கொஞ்சம் யோசிக்க வேண்டும். அவகாசம் வேண்டும்...'' என்றாள்.

''தாராளமாக எடுத்துக் கொள். ஆனால், அதற்கு முன்னால் நீ ஒன்று செய்ய வேண்டும்...'' என்றான் பீடிகையாய்.

''என்ன?''

''படம் வருவதற்கு முன்னால் டிரெய்லர் என்று போடுவார்களே.. அதுபோல் நடக்க இருக்கும் பெரிய விருந்துக்கு சாம்பிள்போல்.. நீ.. ஒன்று.. செய்ய வேண்டும்...''

''அதான் என்ன?'' என்றாள் எரிச்சல் வந்தவளாய்.

''உன் சின்ன பட்டு இதழ்களை என் கன்னத்தில் ஒற்றியெடுக்க வேண்டும்...''

''என்ன?''

அவள் திடுக்கிட.... அவன் தெளிவாய் விளக்கினான். ''புரியவில்லை? கன்னத்தில் முத்தம் ஒன்று வேண்டும்...''

ஆனால் அந்நேரத்தில அதை தவிர வேறு வழியே இல்லை.

''கடைசியில், வேண்டா வெறுப்பாய் இதழ்களை அவன் கன்னத்தில் ஒற்றினாள்.

அமிலம் பட்டதுபோல் துடித்து விலகினாள்.

அவனோ, ''பார்த்தாயா, என்னுடைய விஷயத்தில் மலர் எப்படி வண்டைத் தேடி வருகிறது பார்த்தாயா?''என்றான் ஆணவக் கொக்கரிப்பு.

அன்று இரவு தன் ரூமிற்குச் சென்றவள் ரொம்ப நேரம் சிந்தித்து விட்டு, இரவு உணவை முடித்துவிட்டு படுக்கப் போனாள்.

படுக்க செல்வதற்கு முன் ரூம் கதவை மூடப்போனவள் புயலாய் உள்ளே நுழைந்த ராஜாவைக் கண்டு அதிரத்தான் செய்தாள்.



''உன்னிடம் பேச வேண்டும்...'' என்றான் ராஜா மொட்டையாக.

சாம்பல் நிற பூக்கள் நிரம்பிய இரவு உடையை அணிந்திருந்தான். பெரிய சினிமா ஹீரோ போல் கையில் பைப் வேறு.

இருக்கையொன்றை இழுத்துப்போட்டு அமர்ந்தவன், ''மயிலிடம் இறகு கேட்ட கதை தெரியுமா?''என்றான் அதே அவசரத்தோடு.

அவள் பேசாமல் இருக்கவும், ''மயிலிடம், மயிலே மயிலே... இறகு போடு என்றால், அது போடவா போகிறது? அதுபோல்தான் உன் கதையும். நீ வந்து பத்து நாட்களாகிவிட்டது. இன்னும் நீ முடிவெடுக்கவில்லை. எனக்கு பொறுமை போய் கொண்டிருக்கிறது. என்னால் இனியும் சகிக்க முடியாது. நாளை உன் முடிவைச் சொல்கிறாய். புரிகிறதா?''

அவன் குரல் உயர்ந்து அதட்டியது.

அதே அதட்டலுடன் கண்களை உருட்டி மிரட்டி விட்டு வேகமாய் ரூமை விட்டு வெளியேறினான் ராஜா.

# 11

மறுநாள் காலை என்றுமில்லாததாய் புன்முறுவலுடன் அவள் 'குட்மார்னிங்...' சொன்னபோது ராஜா அவளை அதிசயமாய்ப் பார்த்தான்.

''என்ன சூரியன் மேற்கில் உதித்து விட்டதா?'' என்றான் ஏளனமாக.

''நான் ரொம்பவும் மாறிவிட்டேன். மாறிவிடப்போகிறேன்'' என்றாள் அவள் அழுத்தமாக.

''அப்படியா? ஆச்சரியமான வாழ்த்துக்கள்...!''

அவனது இடுங்கிய கண்கள் அவளை நோக்கி மேலும் விரிந்தது.

''நான் உங்கள் திட்டத்திற்கு சம்மதிக்கிறேன்...'' என்றாள் அவள் உறுதிக் குரலில்.

''நிஜமாகவா?''

''நிஜமாகத்தான்...''

''சரிதான். சந்தேகமில்லை! இன்று சூரியன் மேற்கில் தான் உதித்திருக்கிறது...''

''ஆனால், அதில் ஒரு சின்ன திருத்தம்...''

''திருத்தமா..?''

''ஆம். மனைவி மாதிரி என்பது போய் மனைவி என்ற திருத்தத்துடன்.''

''என்ன மனைவியா...? நீயா?''

அவன் வெகுண்டு எழுந்துவிட்டான். விறுவிறுவென நடந்து அவளை நெருங்கினான்.

''சொல்வதை தெளிவாகச் சொல்...'' என்றான்.

''உங்கள் திட்டத்திற்கு சம்மதிக்கிறேன். ஆனால், நீங்கள் மனைவியாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். என் கழுத்தில் தாலி கட்ட வேண்டும்...''



''அட.. இதென்ன புதுக்கதை?''என்றவன் அவசரமாய் திரும்பி எதிரே சுவரிலிருந்த கண்ணாடியில் போய் தன் முகத்தை அப்படியும் இப்படியுமாக பார்த்தான்.

''என் முகத்தைப் பார்த்தால் அவ்வளவு இளிச்சவாயனாகவா உனக்குத் தெரிகிறது?'' என்றான் ஏளனக் குரலில்.

''நான் சொல்வது முழுமையாய் கொஞ்சம் பொறுமையாய் கேட்கிறீர்களா?''

''சொல்லு...''

''நான் உங்களை தாலிகட்டச் சொல்வது ஊரறிய உலகறிய அல்ல. இந்த நாலு சுவற்றுக்குள் யாருக்கும் தெரியாமல்தான்...''

''யாருக்கும் தெரியாமலா?''

''ஆம். நம் இருவருக்கும் மட்டும் தெரிந்தால் போதும். நான் யாரிடமும் சொல்லப் போவதில்லை. அப்படிச் சொன்னால்தான் நம்புவார்களா!''

அவள் எதிர்கேள்வி கேட்டு, விஷயத்தைச் சொன்னதும் அவன் முகத்தில் சுவாரஸ்யம் கூடியது. ''சரி... அதற்குப் பின்.. எப்படி?'' என்றான் ஆர்வமாய்.

''வேறென்ன? நான் உங்கள் மனைவிபோல் நினைத்துக் கொள்கிறேன். நீங்கள் என்னை 'மனைவி மாதிரியாக' நினைத்துக் கொள்ளுங்கள். இருவருக்கும் பிரச்சினை தீர்ந்தது.''

''அட.... இது.. கூட நல்ல ஐடியாவாகத்தான் இருக்கிறது...!'' கைகளை குஷியாய் சொடுக்கியவன் மறுகணமே அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''இதில் எதும் பித்தலாட்டம் இல்லையே...?''

''பித்தலாட்டமா! நானா?''

அவள் பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தாள்.

''இப்படி, என்னை தாலி கட்ட வைத்து, பின் ஏதாவது பிளான் போட்டு நிஜமாகவே எனக்கு மனைவியாக.. என் கோடிக்கணக்கான சொத்துக்கு குறிவைத்து... சொந்தக்காரியாக திட்டம் தீட்டிருக்கிறாயா சொல்...?'' என்றான் அவன் கடுமையாக.

அவன் சீரியஸாய் கேட்க அவளது சிரிப்பலை மேலும் மேலும் பெருகியது.

''கேட்பதற்கு பதில் சொல்...'' என்றான் அவன் மீண்டும் மிரட்டலாய். நிர்மலா சிரிப்பை நிறுத்தி, ''மறுபடியும் கண்ணாடியைப் போய் பாருங்கள்...'' என்றாள்.

''எதற்கு?''

''உங்கள் முகத்தைப் பாருங்கள்! யாருக்கும் தெரியாமல் தாலி கட்டும் பெண்ணிடம் சொத்து முழுவதையும் எழுதிக் கொடுக்கும் இளிச்சவாய் முகமா அது...?''

அவனது கேள்வியை திருப்பி அவனிடமே ஏளனமாக கேட்டாள்.

ராஜாவால் பதில் சொல்ல முடியவில்லை.

கொஞ்ச நேரம் அவளையே உற்றுப் பார்த்து சிந்தித்தான். அவன் முகத்தில் வெவ்வேறு உணர்ச்சி ரேகைகள் எழுந்து மறைந்தது.

''என்ன மறுபடியும் பயமா?'' என்றாள் அவள்.

''பயமா? எனக்கு!'' தோள்களை வேகமாய் சிலுப்பி குலுக்கிக் கொண்டாள்.



''நான் ஒருபோதும் பயப்படுவதில்லை! உதடு விளித்து சிரித்தான்.

''பின் என்ன தயக்கம்?''

அவன் மீண்டும் நெற்றியைச் சுருக்கி தலைசாய்த்து யோசித்தான்.

''அப்படி யாருக்கும் தெரியாமல் தாலி கட்டுவதில் உனக்கு என்னதான் லாபம் இருக்கிறது?'' என்றான்.

''லாபமில்லை!'' மனதிருப்தி...!'' என்றாள் அவள் அழுத்தந்திருத்தமாக.

''மனதிருப்தியா..? புரியவில்லையே...?''

''நான் கெட்டுப் போகவில்லை. என் உடம்பை கணவனிடம்தான் ஒப்படைக்கிறேன் என்கிற மனதிருப்தி...'' அதற்குள் அவள் விளக்கம் கொடுத்தாள்.

''அட.. நீதான் உண்மையான தமிழச்சி...!''

அவன் அடக்க முடியாமல் பெரிதாய் சிரித்தான்.

இரவு முழுவதும் சிந்தித்து தெளிவுபடுத்தி அவள் எடுத்த முடிவை, எள்ளி நகையாடுவதுபோல் இருந்தது அவனது சிரிப்பு.

அந்த சிரிப்பில் அவள் உடம்பே நடுங்கியது. கீழ் உதட்டை பற்களால் அழுத்தி நடுக்கத்தை நிறுத்தினாள். ஒரு கணம் பெரிய தவறைச் செய்யப் போகிறேமோ என்ற பயவுணர்வு அடிவயிற்றிலிருந்து எழுந்து அவளை ஸ்தம்பிக்க வைத்தது.

# 12

ராஜா அவளது திட்டத்திற்கு ஒத்துக் கொண்டான். ''புதன்கிழமை. நல்ல நாள்...'' என்றாள் நிர்மலா முன்பே காலண்டரை பார்த்து வைத்தவளாய்.

ராஜா சிரித்தான். ''நல்ல நாள் எதற்கு? உனக்கு தாலி கிடைக்கப் போவதற்கா.. அல்லது எனக்கு நீ கிடைக்கப் போவதற்கா?'' என்றான் கிண்டலாய்.

நிர்மலா அதற்கு பதில் சொல்லாமல் அவனையே பார்த்தாள். முன்பில்லாமல் அவனிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது.

அவள் அதைத் தெரிந்து கொள்ள தேடுகிறாள் என்பதை உணர்ந்தவன் போல், ''என்ன பார்க்கிறாய்? வழக்கத்திற்கு மாறாய் வகிடெடுத்து முடியை அழுத்தச் சீவியிருக் கிறேன். புதுமாப்பிள்ளை அல்லவா?'' என்றான் மறுபடியும் கேலி பொங்க.

சொல்லும் போதெல்லாம் அவள் முகத்தை உற்றுப் பார்த்து அவளது மனநிலையை படிக்க முயன்றான். நிர்மலாவோ எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் நடமாடி அவனுக்கு திகைப்பையே தந்தாள்.

அவன், அப்படி தன் செய்கையில், திட்டத்தில் எதும் உள்நோக்கம் இருக்குமோ என அடிக்கடி மருகுவதைக் கண்ட அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சியே ஏற்பட்டது.



அன்று இரவு சென்னைக்கு போன் செய்து ரங்குமாமா விடம் அம்மாவின் நலம் பற்றி விசாரித்தபோது...அவன் எதிரிலே காதைத் தீட்டியபடி உட்கார்ந்திருந்தான்.

கல்யாண சமாச்சாரத்தை அவள் சொல்கிறாளா... என்று பார்த்தான்.

அவள் அதுபற்றி மூச்சு விடவில்லை. வழக்கமான விசாரிப்பு முடிந்ததும் திருப்தியடைந்தவளாய் ரிசீவரை வைத்து விட்டாள்.

''சொல்லவில்லையா?'' என்றான் அவன் கரிசனமாய்.

''எதை?'' என்றாள் அவள் தெரியாததுபோல்.

''மறந்துவிட்டாயா? நாளை நமக்கு கல்யாணம்...!''

''ஊரறிய இல்லையே...'' என்றபடி அவன் முகத்தைப் பார்த்ததும் அவன் முகத்தை திருப்பிக் கொண்டான்.

''இது.. நீ எடுத்த முடிவு...''

''முடிவல்ல... மனதிருப்தி..'' அவள் அதையும் திருத்தினாள். அவன் திரும்பி கொஞ்ச நேரம் அவளையே உற்றுப் பார்த்தான்.

அவளது நீளமான கூந்தல் அழகை, தழைய தழைய பின்னி நிறைய பூக்கள் வைத்திருந்ததை மயக்கும் விழிகளில் லேசாக மைதீட்டி இருந்ததை எல்லாவற்றை யும் கவனித்தவன் கடைசியில் நளினமான உடலமைப் பில் வந்து இறங்கினான்.

இதுவரை எந்தப் பெண்ணிடமும் அவன் பார்த்திராத கச்சிதமான உடலமைப்பு!

ஒரு கணம் அதையே வியந்து பார்த்தவன், ''எதும் உடற்பயிற்சி செய்கிறாயா?'' என்றான்.

அவள் ஒரு கணம் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, ''இல்லை. மனப்பயிற்சி செய்கிறேன்...'' என்றாள்.

''மனப்பயிற்சியா...?''

''நடப்பவைகளை நல்லவைகளாக ஏற்றுக் கொள்ளும் மனப்பயிற்சி...''

அவள் விளக்கம் கேட்டு சிரித்தவன், அதே சிரிப்பு மாறாமல் அங்கிருந்து எழுந்துச் சென்றும் விட்டான்.

ஆயிற்று. அன்றைய இரவுப் பொழுது கழிந்து மறுநாள் உதயமாயிற்று.

காலையிலே குளித்து முடிந்து, பூஜையறையில் மன முருக வேண்டி நிஜமான மணப்பெண் போலவே லக்ஷ்மி கரமாய் வெளிவந்தவளை கிண்டலாகவே பார்த்தான்.

''மணப்பெண் ரெடியா? மாப்பிள்ளை இன்னும் ரெடியாகவில்லையே!''

கேலி செய்தும் அவள் சிரிக்காமல் இருக்க, ''கொஞ்சம் பொறு. வாழைத் தோரணங்கள், வாத்திய மேளங்களுக் கெல்லாம் சொல்லி அனுப்பியிருக்கிறேன்... வந்துவிடட் டும்...!'' என்றான் மறுபடியும் வேடிக்கையாக.

நிர்மலா அவன் பேச்சை கொஞ்சமும் கவனிக்காதவ ளாய், ''பத்து மணிக்கு மேல் முகூர்த்த நேரம்...'' என்றபடி குனிந்தாள்.

''அட! மணப்பெண் என்றதும் பொல்லாத வெட்கம் வந்துவிட்டதா...?'' மறுபடியும் கேலிச்சிரிப்புடன், அவளை நெருங்கியவன் குனிந்த அவளது விழிகளி லிருந்து நீர்த்துளிகள் படபடவென தெறித்து விழுவதை கவனித்ததும் தடுமாறத்தான் செய்தான்.



''அழுகிறாயா என்ன?''

அவன் கேட்டதும், அவளுக்கு கண்களில் வற்றி விட்டது. கண்ணீர்த் துளிகள் நின்று கொண்டது. தன்மானம் கொண்டவள்போல் கண்களை துடைத்து நிமிர்ந்து கொண்டாள்.

அவன் விடாமல் அவளது விழிகளையே கூர்ந்து பார்க்கவும், ''ஆனந்தக் கண்ணீர்! கல்யாணம் நடக்கப் போகிறதல்லவா..?'' என அதற்கு விளக்கமும் கொடுத்தாள்.

ராஜா ஓரிரு கணம் அமைதியாய் நோக்கிவிட்டு தோள் களை குலுக்கிக் கொண்டான்.

''ஐந்து நிமிடத்தில் ரெடியாகி வருகிறேன்...'' என்றபடி மறைந்தான்.

மறுபடியும் அவன் தோன்றியபோது புது உடைகளை தரித்திருந்தான். மெல்லிய வெளிர் நிற கோட்டும், சாம்பல் நிற சூட்டுமாய் பளீரென இருந்தான். முகம் நிறைய புன்னகையை கொண்டு வந்து, ''நான் ரெடி...'' என்றான்.

நிர்மலா அவனையே உற்றுப் பார்த்துவிட்டு முன்னால் நடந்தாள்.

எங்கே அவள் பூஜையறைக்கு கூட்டிச் செல்கிறாளோ என்று நினைத்து நடந்தவன் அவள் அவனது ஆடம்பர அலங்கார அறையை நோக்கி நடந்ததைக் கண்டு வியந்தான்.

அவன் அந்த ஆடம்பர அறையை ரசித்துக் கட்டியிருந் தான். அந்த அறை முழுவதும் ஆளுயர கண்ணாடிகள். பெரிதாய் விதவிதமான வடிவங்களில். அதனாலே அந்த

ரூமில் நுழைந்ததும் திரும்பிய திசையெல்லாம் பிம்பங் களால் பல கண்ணாடி உருவங்கள் தெரிய ஆரம்பித்து விடும்.

நிர்மலா அந்த அறையின் கதவுகளைத் திறந்தாள்.

''எதுக்கு இங்கு?'' என்றான் ஆச்சரியமாக.

''சொன்னதை மறந்துவிட்டீர்களா? நடக்கப் போகும் கல்யாணத்திற்கு நம்மைத்தவிர வேறு யாரும் பார்க்கக் கூடாது... எந்த சாட்சியும் இருக்கக் கூடாது என்று...''

அவள் ஞாபகப்படுத்தியதும் தலையாட்டிக் கொண் டான்.

நிர்மலா சாமி படம் முன் பூஜை செய்து மஞ்சள் கட்டி வைத்திருந்த தாலிக் கயிற்றை கொடுத்தாள். பயபக்தி காட்டி வாங்கியவன், ''எல்லாமே விளையாட்டுத் தனமா இருக்கிறது. சிறுவயதில் பொம்மைகளுக்கு கல்யாண செய்து விளையாடுவதுபோல் இருக்கிறது. இதெல்லாம் தேவைதானா?'' என்றான் அவள் மனநிலையை அறியு கடைசி முயற்சியாக.

அதற்கும் நிர்மலா விடாமல், ''கடவுளின் திருவிளை யாடல்களுக்கு பயன்படுத்தப்படும் பொம்மைகள்தா நம்மைப் போன்ற மனிதர்கள்...'' எனவும் அவனுக்கு வேறுவழியில்லாது போயிற்று.

அதற்கு மேல் ராஜா தாமதிக்கவில்லை. தாலி கயிற்றை அவள் கழுத்துக்கு கொண்டு போனான்.

பெரும் தூக்குக் கயிறு கழுத்தை இறுக்க வருவது போ நீர்த்துளிகளுடன் கண்களை இறுக மூடிக் கொண்டா நிர்மலா.



கூடவே, தாலியைக் கட்டி முடிச்சுப் போடும் அவனது கரங்கள் முதன் முறையாய் நடுங்குவதையும் கவனித் தாள்.

## 13

விளையாட்டுப் போல்தான் அது இருந்தது. ரூமிற்குள் சென்று யாருக்கும் தெரியாமல் அவன் தாலியைக் கட்டினான். அவளும் கண்களை இறுக மூடி வாங்கிக் கொண்டாள்.

நிர்மலா நிமிர்ந்து ராஜாவின் முகத்தையே பார்த்தாள். அப்படி அவள் பார்ப்பாள் என்பதை யூகித்தவன்போல் ஓரிரு நிமிடம் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் நின்றுவிட்டு விடுவிடுவென அங்கிருந்து வெளியேறி னான்.

நிர்மலா, கழுத்தில் புதிதாய் பூதாகரமாய் தொங்கிக் கொண்டிருந்த மஞ்சள் கயிற்றை உற்றுப் பார்த்தாள். அவள் விரல்கள் மெல்ல அதை வருடியது.

ஊரறிய நடக்க வேண்டிய திருமணம்... இப்படி யாருக் கும் தெரியாமல் நான்கு சுவற்றுக்குள்.. குபுகுபுவென எழுந்த கண்ணீரை, பீறிடும் மனநிலையை மறுகணமே அடக்கிக் கொண்டாள்.

சில நேரங்களில் அதிகம் சிந்தித்தல் கூடாது. சிந்திப்பதே பெரும் தண்டனையாய் போய் விடும்.

விட்டேற்றியான மனநிலையை கொண்டு வந்து எதையும் பொருட்படுத்தாதவள்போல் நிமிர்ந்து கொண்டாள். அந்த அறையிலிருந்து வெளியேறி வழக்கமான வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

அன்று ராஜாவின் நடவடிக்கையிலும் நிறைய புதிராய் இருந்தது. வழக்கமாய் மதியம் வீட்டிற்கு உணவுக்காக வருபவன் அன்று வரவில்லை. மாலை வருவானென்று பார்த்தால்... அப்போதும் வரவில்லை!

இரவு ஏழு மணியைத் தாண்டியதும் நிர்மலாவால் பொறுக்க முடியவில்லை. இருக்கை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு பங்களா வாசலிலே உட்கார்ந்து விட்டாள்.

ஒரு கணம் கட்டிய மனைவிபோல் கணவனுக்காக காத்திருக்கும் அவளது நிலையை நினைத்து அவளுக்கே சிரிப்பாய் வந்தது.

அவளும் கட்டிய மனைவிதான்! என்ன்.. அவன் அவளை மனைவியாய் ஏற்றுக்கொள்ளவில்லை! 'மனைவி மாதிரி'தான் நினைத்துக் கொண்டிருக்கிறான்...!

கண்கள் பூக்க காத்திருந்தவள் அப்படியே சிலைபோல் தான் தன்னை மறந்திருந்தாள். திரும்பவும் காரின் ஹார்ன் ஒலி கேட்டு உணர்வுக்கு வந்தபோது மணி இரவு பன்னிரெண்டு.

வந்தது ராஜாவின் கார்தான்!

காரிலிருந்து ஒருவித தள்ளாட்டத்துடனே இறங்கி வந்தான் ராஜா!

குடித்திருக்கிறானா என்ன? இதுவரை ஒருநாள்கூட அவன் குடித்ததை அவள் பார்த்ததில்லையே!



அதே தள்ளாட்டத்துடன் கண்கள் சொருக வந்தவன் அவள் பக்கம் வந்ததும் பிரேக்கிட்டதுபோல் நின்றான்.

அவனது சிவந்த விழிகள் அவளை உற்றுப் பார்த்தது.

''என்ன காத்திருக்கிறாயா? புது மணப்பெண்போல் முதலிரவிற்காக காத்திருக்கிறாயா?''

அவன் அப்படிக் கேட்டதும் சாட்டையால் அடித்தது போல்தான் அவள் துடித்துவிட்டாள்.

என்ன ஒரு கேள்வி கேட்டுவிட்டான்!

தலைக்கேறிய போதையிலும் அவனது குரூரமான ரசிப்புத்தனம் போகவில்லையே!

குத்திக் கிழித்துப் பார்த்து.. ரத்தம் வந்தால்தான் அவனுக்கு திருப்தி. அதில்தான் அவனுக்கு ரசனை!

அவளால் அந்தக் கேள்வியைத் தாங்க முடியவில்லை. விடுவிடுவென்று உள்ளே ஓடிவிட்டாள்.

அவள் சென்றதும் தோள்களை குலுக்கியபடி அவன் தனது ரூமிற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

நிர்மலாவும் தனது அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தியவள் மெத்தையில் குமுறியபடி விழுந்தாள்.

'மணப்பெண்போல் முதலிரவிற்கு காத்திருக்கிறாயா..?'

அவனது வார்த்தைகள் சுள்ளென்று எழுந்து ரீங்காரமிட்டது.

அவள் வந்தது முதல் என்றுமே குடிக்காதவன் இன்று குடித்திருக்கிறான். அந்த போதையிலும் தெளிவான கண்ணோட்டம். குத்தலான பேச்சு.

ஒரு கணம் தீவிரமாய் சிந்தித்த நிர்மலா அந்த விஷயத்தையும் கண்டு பிடித்தாள். இதுநாள் வரை அவளைத் தொட அவசரப்பட்டவன் இன்று வேண்டுமென்றே புறக்கணிக்கிறான் என்றால்...

அவளுக்கு உண்மை புரிந்தது.

வழக்கமான கல்யாண சம்பிரதாயம்போல் காலையில் தாலி கட்டி இரவில் முதலிரவு நடத்தும் வழக்கத்தை அவனும் கொண்டுவிடக் கூடாதே!

அந்த நினைப்பு அவளுக்கும் வந்துவிடக் கூடாதே!

அவனைப் பொறுத்தவரையில் அவள் மனைவியல்ல, மனைவி மாதிரி தானே?

அந்த நினைப்புத்தானே அவள் மனதிலும் பதிய வேண்டும். அதற்காகத் தான் இப்படி குடித்து லேட்டாய் வந்து நாடகம் போட்டிருக்கிறானா...

அவளது சந்தேகத்தை மறுநாள் காலை உணவுக்காக எதிரில் உட்கார்ந்த போது அவனே தெளிவுபடுத்தினான்.

''நேற்று மனம் சரியில்லை. கொஞ்சம் குடித்துவிட்டேன்...'' என்றான்.

பின் அவள் முகத்தையே உற்றுப் பார்த்துவிட்டு, ''நேற்று என்னை எதிர்பார்த்தாயா?'' என்றான்.

அவள் பேசாமல் இருக்கவும், ''நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய். நாம் என்ன உண்மையான கல்யாண ஜோடியா தாலி கட்டிய அன்றே முதலிரவை நடத்த...?'' முடித்துவிட்டு மறுபடியும் அவள் முகக்குறிப்பை தேடினான்.

நிர்மலா பிடிவாதத்துடன் எவ்வித சலனமுமில்லாமல் இருந்தாள். அது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.



''எவ்வளவு நேரம் இப்படி வாய் மூடிக் கொண்டிருப்பதாய் உத்தேசம்..?'' என்றான்.

அதற்கும் அவள் பேசாமலிருக்க, ''என் கேள்விகளுக்கு பதில் சொல்வது நல்லது...'' என்றான் மிரட்டலாக.

''என்ன பதிலைச் சொல்ல...'' என்றாள் அவள் பதிலுக்கு விட்டேற்றியாக.

அவளை கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, ''அதுவும் சரிதான்...'' என வாயை மூடிக்கொண்டான்.

உணவு முடிந்ததும் அவள் தோட்டப்பக்கம் சென்று அங்கிருக்கும் கீரை செடிகளின் வளர்ச்சியை கவனித்து ஒழுங்குபடுத்துவது வழக்கம்.

அதுபோல தோட்டப்பக்கம் நடந்து சென்றவளை வலப்புற அறையில் இருந்து நீண்ட அவனது கரம் படீரென இழுத்துப் பிடித்தது. அப்படியே அவளை நெஞ்சாற வேகமாய் அணைத்தது.

திடுக்கிட்டு திமிறினாள் நிர்மலா.

முகத்தில் ஒருவித வெறியுடன் ராஜா அணைத்துக் கொண்டிருந்தான்.

இதுபோன்ற வெறியை அவள் என்றுமே அவனிடம் பார்த்ததில்லை.

அவளது கழுத்திலிருந்த தாலிக்கயிற்றை அவனது கரங்கள் வருடி நிமிண்டியது.

''தாலி கட்டியாயிற்று. இன்னும் என்னடி கற்பு நாடகம்?'' சொல்லியபடி அவனது முகம் குனிந்து வேகமாய் அவளை முத்தமிட வந்தது.

தன் பலம் முழுவதையும் திரட்டி ஓங்கி தள்ளிவிட்டாள் நிர்மலா.

# 14

ராஜா அதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை போலும்.

அவள் ஓங்கித் தள்ளிவிட்டதும் ஓரிரு அடிகள் பின்னே போனவன் அடிபட்ட புலியாய் அவளை முறைத்தான்.

''சினிமா வில்லன் என்று நினைத்தாயா? உன்னை துரத்தி துரத்தி கற்பழிக்க?''

கோபமாய் உறுமியபடி எதிர் சேரில் உட்கார்ந்து தனது படபடப்பை அடக்கிக் கொண்டான்

''உன்னை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என தெரியும். செய்து காட்டுகிறேன் பார்...''

மின்னலாய் யோசித்தவன் பக்கத்திலிருந்த டெலிபோன் ரிசீவரை எடுத்து நம்பர்களைச் சுழற்றினான்.

மறுமுனை உயிர் பெற்றதும் அவனது குரல் உற்சாகமானது.

''யார்... டெய்ஸியா? டெய்ஸி.. நான்தான். உடனே வருகிறாயா?'' என்றான்.

''ம்ம்... அவசியம்தான்...''

''...............''

''அதிகப்படியான பணம்.... இருமடங்கு.''



''ம்ம்.. வருகிறாயா? ஐந்து நிமிடத்திலா? உன்னை எதிர்பார்க்கிறேன்...!''

ரிசீவரை வைத்துவிட்டு வெற்றிப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

''புரிந்திருக்குமே! யாரிடம் பேசினேன் அவள் எப்படிப்பட்டவள் என்று...! இன்னும் ஐந்து நிமிடத்தில் அவள் வரப் போகிறாள்... உன் கண் முன்னால் நாங்கள் இருவரும் சரஸமாடப் போகிறோம்... அந்த கண் கொள்ளா காட்சியை தாலி கட்டிய மனைவி நீ ரசித்துப் பார்க்கப் போகிறாய்...''

நிர்மலாவுக்கு திக்கென்றுதான் இருந்தது.

அவள் இதை கொஞ்சமும் எதிர்பாராத ஒன்று.

அந்த முரட்டுத் தனம் கண்டு எழுந்த இயல்பான எதிர்ப்பு வேகத்திலே அவனை ஓங்கியும் தள்ளிவிட்டாள்.

அவன் போன் ரிசீவரை எடுத்தபோது வீட்டிற்குத்தான் போன் செய்து அவளை 'ப்ளாக்மெயில்' செய்யப்போகிறான் என நினைத்தான்.

அவனோ.. இப்படி ஒரு பெண்ணுக்கு போன் செய்து அவள் கண்முன் சரஸமாட வரச் சொல்லி...

அவள் கொஞ்சமும் எதிர்பாராத 'செக்' இது.

அவள் மனதில் ஒரு எண்ணம் இருந்தது உண்மைதான்.

தாலி கட்டியவன் மனதை எப்படியாவது மாற்றி நிஜமாகவே அவனை தன் கணவனாக்கி கொள்வது என்று!

அந்த எண்ணம் தெரிந்துவிட்டதா? யூகித்து விட்டானா? அதை தெரிந்ததால்தான் இப்படி ஒரு ப்ளாக்மெயில் செய்கிறானா?

அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே வெளியே காரின் ஹார்ன் ஒலி கேட்டது.

உற்சாகமாய் எழுந்தான் அவன்.

டெய்ஸி வந்துவிட்டாள்!

முன் ஹாலுக்கு அவளை வரவேற்க ஓடினான்.

நிர்மலாவும் பின் தொடர்ந்து வந்தவள் அந்த டெய்ஸியைப் பார்த்தாள்.

அதிக உதட்டுச் சாயமும் முகத்தில் ஒரு வண்டிப் பவுடருமாய் டெய்ஸியைப் பார்த்ததும் அவள் அந்த மாதிரிப் பெண்தான் என புரிந்து விட்டது.

வேண்டுமென்றே அவள் தோளில் கைபோட்டு தோளோடு அணைத்து கூட்டி வந்தான் ராஜா.

அவள் முன் வந்ததும் நின்று, ''இதுதான் நான் சொன்ன டெய்ஸி...'' என்று அறிமுகம் வேறு.

அவள் அவனையே முறைத்தபடி நின்றது அவனை மேலும் சீண்டியிருக்க வேண்டும்.

''டெய்ஸி முத்தம் ஒன்று கொடுக்கிறாயா?'' என்றான் கன்னத்தைக் காட்டியபடி.

டெய்ஸி சொன்னதை செய்யும் கிளிப்பிள்ளைபோல் படக்கென முத்தத்தைக் கொடுத்தாள். கன்னத்தில் இல்லாமல். அவன் உதட்டிலே.

''என்ன பற்றி எரிகிறதா?'' என அவன் கேட்டபோது நிஜமாகவே எரிமலைபோல் கொதித்துதான் போயிருந்தாள் நிர்மலா.

ஈனப்பிறவிகள்... எப்படியாவது தொலையட்டும் என்றுதான் எண்ணினாள்.



அவள் கண் முன் இருந்து அவர்கள் போய்த் தொலைந்தால் போதும் என்றிருந்தது.

ஆனால் அவனது குறி அவள்தானே...!

அவளை வீழ்த்துவதுதானே!

அவன் வேண்டுமென்றே அவள் முன்னால் சரஸமாட ஆரம்பித்தான். அவளை அப்படியே கட்டியணைத்துக் கொண்டான். காலம் காலமாய் காதலித்து உருகியவர்கள் போல் முத்தப் பரிமாற்றம் வேறு!

சகிக்க முடியாமல் முகத்தை திருப்பிக் கொண்டாள். திரும்பிய முகத்தை இழுத்து தன் பக்கம் திருப்பினான். ''பின், எல்லாம் உனக்காகத்தான். நீ தயார் என்று சொல்லு, இவளை விட்டுவிடுகிறேன்...''

''ச்சீ...'' என்றாள் வெறுப்பாக.

''ச்சீ என்றால்...'' இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்... இவளிடமிருந்து அந்தக் கலையைக் கற்றுக் கொள்...'' என்றபடி மறுபடி டெய்ஸியை அணைக்கப் போனான்.

நிர்மலாவால் அதை தாங்க முடியவில்லை.

பட்டென அந்தக் கரங்களை தட்டி விட்டாள்.

''டெய்ஸியைப் பிடித்து தள்ளிவிட்டு விட்டாய். அப்படியானால் நீ வந்துவிட வேண்டும். வந்துவிடு...'' என்றபடி நெருங்கியவன் அவளை ஒரே இழுப்பில் பற்றி நெஞ்சார இறுக அணைத்தான்.

நிர்மலா துடிக்கத்தான் செய்தாள். அவனது பிடியிலிருந்து விடுபடவோ, திமிறவோ அவளால் முடியவில்லை. அவள் முயற்சி செய்யவும் இல்லை.

அது அவனுக்கு வாக்காய் போயிற்று.

''டெய்ஸி பார், நீ வந்ததும் தான் இவள் அடங்கி இருக்கிறாள். வழிக்கு வந்துவிட்டாள். இனி பிரச்சினையில்லை. இன்று இவள் போதும். நீ போகலாம். இன்னொரு நாள் நமது சந்திப்பை வைத்துக் கொள்ளலாம். கிளம்புகிறாயா?'' என்றபடி பைக்குள் இருந்து புத்தம்புது கரன்ஸி கட்டு ஒன்றை டெய்ஸி பக்கம் விட்டெறிந்தான்.

அதை குஷியுடன் தாவிப்பிடித்து சாயம் தடவிய தன் அத்தனை பற்களையும் காட்டி சிரித்து பிரியா விடை பெற்றுப் போனாள் டெய்ஸி.

ராஜாவோ கோழிக் குஞ்சாய் தன்னுள் பொதிய வைத்திருந்தவளை அப்படியே எதிர் ரூமிற்குள் ஆவேசமாய் இழுத்துச் சென்று மெத்தையில் தள்ளினான்.



# 15

எல்லாம் முடிந்தாயிற்று. தனது வெகுநாள் ஆசையை முடித்துவிட்ட, வெற்றிக்களிப்புடன் அவன் எழுந்து சென்றுவிட்டான்.

திறந்த கண்களும் வெறித்த பார்வையுமாய் அப்படியே ரொம்ப நேரம் மெத்தையில் கிடந்தாள் நிர்மலா.

வெறுப்பும், அழுகையும் மாறி மாறி வந்து சிதறடித்தது. அவளறியாமல் கண்ணீர்த் துளிகள் பெருகி மாலைகளாய் வெளிப்பட்டு உதிர்ந்தது.



மனதில் வெவ்வேறு நினைப்புகள் எழுந்து அவள் எரிச்சலையும் அதிகப்படுத்தியது.

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தாள்.. என்பது அவளுக்கே தெரியாது. சுய உணர்வுக்கு வந்தபோது மணி மதியம் இரண்டைத் தொட்டிருப்பதை உணர்ந்தாள்.

மெல்ல எழுந்து கீழே வந்தாள்.

ராஜாவைக் காணவில்லை. தனது 'வெற்றிகரமான வேலை' முடிந்தவுடன் அலுவலகம் கிளம்பிச் சென்றுவிட்டான் போலும்.

பல்லைக் கடித்தபடி முன்புற இருக்கையில் உட்கார்ந்து விட்டாள்.

மெல்ல.. மெல்ல... நினைவுகள் எழும்பி.. தெளிவு பெற்றன.

மனதுள் ஒருவித இறுக்கம் கூடியது. கை விரல்கள் தனிச்சையாய் அவன் கட்டிய தாலியைப் பற்றியது.

மறுநிமிடமே நிமிர்ந்து கொண்டாள்.

தனக்கு எதுவுமே நிகழாததுபோல் வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள்.

ஆயினும் ராஜாவின் நடவடிக்கைகள் தொடர்ந்தது. ஒவ்வொரு இரவும் தவறாமல் படுக்கையில் அவளை இழுத்தான். சிலமுறை நிர்மலா தூங்கிக் கொண்டிருந்தாலும் இல்லை, தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாலும் அவன் விடுவதில்லை.

தோளில் கைவைத்து தோள்பட்டை கழன்று விடுமளவுக்கு ஒரு உலுக்கு உலுக்குவான்.

நிர்மலா மெல்ல கண் இமைகளை பிரித்து வேண்டுமென்றே புரியாதது போல் பார்ப்பாள்.

அவன் அவளையே விழுங்குவதுபோல் பார்ப்பான்.

''என்ன?''

''புரியவில்லையா...''

''புரியவில்லை....!''

''புலி இரை தேடி வந்திருக்கிறது...'' என்பான் கொஞ்சமும் கூச்சமில்லாமல் - அவள் திடுக்கிட்டு முழு அர்த்தத்தையும் உணரும் முன்பே அவனது ஆக்கிரமிப்பு ஆரம்பித்து விடும். அவனது செயலும் மூர்க்கத்தனமாய்த் தான் இருக்கும்.

கண்கள் வெறித்து நோக்க அவளுள் அவன் சொன்ன 'வேங்கைப்புலி' கதை ஓடும். நிஜமாகவே வேங்கைப் புலியொன்று தன்னைக் கடித்து குதறிக் கொண்டிருப்பதாய் உணருவாள்.

ஒரு கணம் அவளுக்கு தனது நிலை இராமாயணத்தில் ஜடாயு இராவணனை எதிர்த்த நிலையை நினைவு படுத்தும்.

ஜடாயு சர்வ வல்லமை படைத்த அக்கினிப் பறவை. இராமனுக்காக அவன் இராவணன் மீது வெகுண்டு கோபமாய் மோதுகிறான். தன் கூரிய வலிமை மிக்க அலகுகளால் இராவணனது உடம்பை குத்தி குத்தி துவம்சம் செய்கிறான். இராவணனோ ஜடாயு தன் உடம்பில் மோதி விளையாடட்டும் என்பதுபோல் எதிர்ப்பு காட்டாமல் பதிலடி கொடுக்காமல் அப்படியே பொறுத்துக் கொண்டு பேசாமல் இருக்கிறான். ஜடாயு வேண்டிய



மட்டும் அவன் உடம்பில் துவம்சம் செய்து களைத்துப் போகையில் இராவணன் கொதித்துப்போய் ஜடாயுக்கு தன் பலத்தை உணர்த்துகிறான்.

நிர்மலாவும் அதுபோல்தான் குத்திக் கிளறி துவம்சம் செய்யட்டும் என்பதுபோல் கண்கள் இறுக மூடி பொறுத்துக் கொள்வாள்.

இரை தேடிவிட்ட புலிபோல் அவன் முடித்த பிறகு அவளை விடுவித்து விட்டு படுத்துக் கொள்வான். அவனது 'மூர்க்கம்' அவளுக்குப் புரியாத ஒன்றாய் இருந்தது.

அதற்கும் ஒருநாள் அவன் வாயாலே விளக்கம் கொடுத்தான். ''நான் அப்படி மூர்க்கமாய் நடந்து கொள்வது கூட காரணமாகத்தான். மென்மையாக நடந்து கொண்டால் உனக்கு மனைவி போன்ற நினைப்பு வந்து விடும். ஆனால், நீ மனைவி இல்லையே! மனைவி மாதிரி தானே? உன் போன்ற பெண்களிடம் அப்படி முரட்டுத் தனமாய் நடந்து கொண்டால் தான் சுகமிருக்கும்...'' என்றபோது அவளுக்கு உயிரேபோய் விடும் போல்தான் இருந்தது.

சொல்வது மட்டுமல்ல. செயலில் காட்டுவதிலும் அவன் குறியாயிருந்தான். ஒவ்வொரு சின்ன அசைவிலும், ஸ்பரிசத்திலும் அவளை அவமதித்தான். இனிமையாய் பயில வேண்டிய வாழ்க்கைப் பாடத்தை நெஞ்சு கசக்கக் கற்றுக் கொடுத்தான்.

இடையிடையே வேண்டுமென்று லைட்டைப் போட்டு அவள் முகத்தைப் பார்க்கும் குரங்குத் தனம் வேறு. அவளது துடிப்பும் வேதனையும் அவனுக்குத் திருப்தியைத் தந்ததோ... என்னவோ!

எல்லாம் முடிந்ததும் பெரிய மன்மத கொக்குபோல் நெற்றியில், ஒரு முத்தம் கொடுப்பான். கடைசியில் அவள் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிற்றை ஒரு வருடு வருடி, ''பார், என்னை நம்பாமல் இந்தக் கயிற்றை நம்பிக் கொண்டிருக்கிறாய். சரியான பேதை நீ!'' - கன்னத்தில் ஒரு தட்டு தட்டி சிரிப்பான்.

அதன் பிறகு, நிர்மலா வெறுப்பாய் திரும்பிக் கொள்வாள். எங்கே தூங்குவது? நெஞ்சு பற்றி எரிய எப்படி நிம்மதியாய் தூங்க முடியும்?

திரும்பி அவனைப் பார்ப்பாள்.

அவனும் தூங்கியிருக்க மாட்டான்!

மாடி பால்கனிப் பக்கம் சென்று சிகரெட் ஊதியபடி குறுக்கும் நெடுக்குமாய் ரொம்ப நேரம் நடப்பான். சில சமயம் அவனது கைகளில் மதுக் கோப்பை இருக்கும்.

'மனம் சரியில்லை என்றால் மது தேவைப்படும்...' என அவன் முன்பு ஒருமுறை சொன்னது அவள் ஞாபகத்திற்கு வரும்,

இரை தேடிவிட்ட பிறகும் மனம் சரியில்லையா? எதனால்? ஒருவேளை மனம் உறுத்துகிறதோ!

இப்படியே 'மூர்க்கத்தனமான' இரவுகள் நிர்மலாவுக்கு தொடர்ந்தது. நிர்மலாவும் சகித்துக் கொண்டு தீவிரமாய் யோசிப்பாள்.

யோசிக்க.. யோசிக்க அவளுள் வேறொரு எண்ணம் திட்டமாய் உதித்தது.

அன்று மாலை.. வீடு திரும்பிய ராஜாவிற்கு ஒரே ஆச்சரியம்!



ஹிந்திப் பாடலொன்றை சிட்டியடித்தபடி நுழைந்தவன் குஷியான அவளது நடவடிக்கையைக் கண்டு அரளத் தான் செய்தான்.

கண்ணீரும் கம்பலையுமாய் அவளை எதிர்பார்த்தவனுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் அவள் உற்சாகமாய் இருந்தது மலைப்பையே உண்டு பண்ணியது.

நெடு நேரம் அவளது செய்கைகளையே உற்றுப் பார்த்தவன் அடக்க முடியாமல் கேட்டே விட்டான்.

''நடந்ததை மறந்து விட்டாயா...? அல்லது உனக்குப் பழகிப் போயிற்றா...?'' என்றான் குத்தல் குறையாமல்.

அவள் பேசாமல் சிரித்தபடி ஷெல்பை சுத்தம் செய்யும் தனது வேலையை தொடர்ந்து செய்யவும் அவனுக்கு ஆத்திரம் தான் வந்தது.

அதே ஆத்திரத்துடன் அவள் தோளை ஓங்கிப் பற்றி தன் பக்கம் ஆவேசமாய் திருப்பினான்.

''கேட்கிறேன் அல்லவா? பதில் சொல்லு...! அடிபட்டும் உனக்கு புத்தி வரவில்லையா?'' என்றான்.

அவள் தன் சிரிப்பை பெரிதாக்கினாள்.

''என்ன திமிர் உனக்கு! எல்லாம் என் தப்பு! இரவு மட்டும் போதும் என்று கொஞ்சம் டீஸண்டாய் நடந்து கொண்டேன். இன்று வா! பகலிலும் மிருகம் போல் உன்னைக் கடித்துக் குதறுகிறேன்.. அப்போதுதான் உன் போன்ற கழுதைகளுக்கு புத்தி வரும்...''

மூச்சு வாங்க பேசிவிட்டு அவன் ஓய்ந்தபோது அவளது சிரிப்பு அடக்க முடியாமல் போனது. தொடர்ந்து வந்த அவளது பயமற்ற சிரிப்பு அவனுள் கலவரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

''முதலில் சிரிப்பை நிறுத்து...'' என்றான் ஆத்திரமாய்.

நிர்மலா நிறுத்தினாள்.

''எதற்கு சிரிக்கிறாய்? சொல்லித் தொலை...!''

''எல்லாம் நீங்கள் செய்யும் காரியத்தை நினைத்துதான்...''

''அதற்கென்ன வந்தது?''

''என்ன நடந்தது?''

''என் நினைப்புப்படி நடந்தது... எனது வெகுநாள் ஆசையை வெற்றிகரமாக தீர்த்துக்கொண்டு வருகிறேன்...''

''வெற்றிகரமாகவா?''

அவள் மறுபடி சிரிக்கப் போனாள்.

''ஷ்.. சிரிப்பு வேண்டாம். விஷயத்தைச் சொல்...''

''உங்கள் செய்கை.. நீங்கள் என்னிடம் நடந்து கொள்வது எல்லாம் கொஞ்சம் நினைத்துப் பார்த்தீர்களா..?''

அவன் இம்முறை ஏளனமாய் அவளைப் பார்த்தான்.

''நினைத்துப் பார்த்துதான் சந்தோஷம்! என் உடம்பு முழுவதும் பூரிப்பு! உன்னை பழி வாங்கிவிட்ட வெறி!''

அவன் தன் பங்கிற்கு சிரித்ததை நிர்மலா பொருட்படுத்தாமல், ''நடந்ததையும்... உங்கள் நினைப்பையும்... வெளியே யாரிடமாவது சொல்லிப் பாருங்கள். சிரிப்பார்கள். உங்கள் மடமையை நினைத்து சிரிப்பார்கள்...''

''சிரிப்பார்களா...? என் மடமையை நினைத்தா என்ன சொல்கிறாய்?''

''இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை? தாலி கட்டிய மனைவியுடன் படுக்கையில் இருந்ததை வெளியில் யாரிடமாவது சொன்னால் சிரிக்காமல் என்ன செய்வார்கள்?''



அவன் முதன் முறையாக திகைத்தான். அவன் குரல் தடுமாறியது.

''ஆ.. ஆனால்.. நீ...நீ.. தாலி கட்டிய...'' ஆவேசமாய் பேச்சை தொடங்கியவன் மேற்கொண்டு பேச முடியாமல், ''ஊரறிய தாலி கட்டியவள் இல்லையே...?'' என முடிக்கவும் செய்தான்.

''ஊரறிய இல்லைதான்! ஆனால் 'உங்களறிய' தாலி கட்டியவள்தானே! உங்களது மனசாட்சிக்குத் தெரியும்படி நீங்கள்தானே செய்தீர்கள்... நீங்களே.. தாலி கட்டி.. நீங்களே சந்தோஷமாய் இருந்துவிட்டு இப்போது.. உங்களை.. நீங்களே ஏமாற்றிக்கொண்டு...'' அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

''ஸ்டாப் இட்...''

பொறுமையிழந்து அவன் கத்தினான்.

அவள் சிரிப்பைத் தொடர்ந்தாள். ''இப்போது புரிகிறதா? உங்கள் விரலைக் கொண்டு உங்கள் கண்களையே குத்திக் கொண்டு...''

அவள் சொல்லச் சொல்ல அவனுக்கு மூளையில் யாரோ வேகமாய் அறைவதுபோல் இருந்தது.

# 16

ராஜா அங்கு நிற்கவில்லை. வேகமாய் தன் ரூமிற்கு வந்து விட்டான்.

இருக்கையை இழுத்துப் போட்டு உட்கார்ந்தவன் அவசரமாய் சிகரெட் எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

படபடவென புகைகளை ஊதியவாறு சிந்தித்தான்.

அவள் சொல்வது உண்மைதானே!

ஊரறிய தாலி கட்டாவிட்டாலும் 'அவனறிய'த்தான் தானே தாலி கட்டியிருக்கிறான்...!

அப்படி அவன் கட்டிய மனைவியுடன் தானே படுக்கையை பகிர்ந்திருக்கிறான்...!

யாரையோ ஏமாற்றுவதாய் நினைத்துக் கொண்டு தன்னைத்தானே ஏமாற்றியிருக்கிறான்..?

இதுவரை படுக்கையில் சந்தித்த எந்தப் பெண்ணிற்காவது இப்படித் தாலியைக் கட்டியிருக்கிறானா...!

அவன் வாழ்நாளில் முதன்முதலாய் தாலி கட்டியது இவளுக்குத்தானே? அப்படியானால்... ஊரறிய இல்லாவிட்டாலும்... அவனறிய.. அவனைப் பொறுத்தவரை அவள் மனைவிதானே! நினைப்பு வேப்பங்காயாய் கசக்க காறித் துப்பினான்.

அவள் ஏளனச் சிரிப்புடன் சொன்ன வார்த்தை விசுவரூபமெடுத்து அவனைத் தாக்கியது.

''உங்கள் விரலைக் கொண்டு உங்கள் கண்களையே குத்திக் கொண்டு...'' அவளது சிரிப்பலை தொடர்ந்து அவனது மூளையில் எதிரொலித்தது. கோபமாய் சிகரெட்டைத் தூக்கியெறிந்தான்.

எவ்வளவு பெரிய முட்டாள் நான்! எப்படி இந்த திட்டத்திற்கு ஒத்துக் கொண்டேன்...?



சரியான சாகஸக்காரி என்னமாய் நாடகமாடிவிட்டாள். ஏதோ... மன திருப்தி.. அது... இதுவென சொல்லி நம்பும்படி செய்து கழுத்தில் தாலியும் கட்ட வைத்துவிட்டாளே...!

அவனுக்கு முன்பு எப்போதோ படித்த 'ஹிட்லர்' கதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

சர்வாதிகாரியான ஹிட்லர், ஆட்சியில் இருக்கும்போது மற்ற நாட்டில் உள்ள பெரிய அதிகாரிகளில் இருந்து சாதாரண குடிமகன் வரை எல்லோரும் யார் ஹிட்லரை அழிப்பது, எப்படி ஹிட்லரை கொலை செய்வது என்பது பற்றியே யோசித்தனராம்.

அதே சமயம் ஹிட்லரின் கடுமைத்தனம், இரக்கமில்லாமல், முடிவெடுக்கும் கொடூரத்தனம் கண்டு எல்லோரும் பயந்து நடுங்கினர். அப்பொழுது வாழ்ந்த ஜெஃப்ரீ என்ற ஆங்கில நாவலாசிரியருக்கும் ஹிட்லரின் மேல் கோபம் உண்டு. அதனாலே ஹிட்லரை மையமாய் வைத்து நாவல் ஒன்று எழுதினாராம்.

அந்த நாவலில் ஹிட்லரைப் போலவே சர்வாதிகாரம் படைத்த கதாபாத்திரம் ஒன்றை உருவாக்கினாராம். பிறகு அந்த ஹிட்லர் கதாபாத்திரத்தை ஒரு சாதாரண விளையாட்டு வீரன் சுட்டுக் கொன்று விடுவதைப் போல் கதையை முடித்தாராம். அந்த கதை மக்களிடையே பெரும் பாராட்டை பெற்று மிகப்பெரிய வரவேற்பையும் பெற்று விட்டதாம்!

அப்படி சர்வ வல்லமை படைத்த பலசாலி ஒரு சாதாரண ஒரு விளையாட்டு வீரனிடம் குண்டடிப்பட்டு விழும் கதை போல்தானே... இப்போது அவனது கதையும் இருக்கிறது?

யார் யாரையோ.. எதிர்த்து.. எத்தனையோ பெண்களை வீழ்த்தியிருப்பவன் ஒரு சாதாரணப் பெண்ணிடம் தாலி ஒன்றைக் கட்டி எவ்வளவு எளிதில் தோற்றுப் போயிருக்கிறான்...! பெரும் சிங்கத்தை சிறு முயல் வென்று விட்டதே!

நினைக்க நினைக்க வெறுப்பும் ஆத்திரமும் ஒரு சேரப் பொங்கியது.

அவள் எவ்வளவு தெளிவாய் பேசுகிறாள். பேசிவிட்டாள்!

தாலி கட்டியவன் நீ!

ஊரை விடு. உன்னை எடுத்துக் கொள்.

உன்னறிய நடந்ததுதானே! நீ தானே தாலி கட்டினாய்?

நீயே தாலி கட்டி... நீயே... மனைவியாக்கிக் கொண்டு.. நீயே வேறு யாருக்கோ சொந்தமானவளை புணர்வது போல் நினைத்து உன்னையே ஏமாற்றிக் கொண்டு.. இதில் என்ன கொக்கரிப்பு வாழ்கிறது?

வீழ்ந்தது... அவள் இல்லையே! நீ தானே வீழ்ந்திருக்கிறாய்!

யோசிக்க.. யோசிக்க கோபம் அவன் தலைக்கேறியது.

அன்றும் தன் வழக்கத்திற்கு மாறாக மதுப்புட்டிகளை நாடினான் அவன்.

அவன் கோபத்தை அறிந்ததாலோ என்னவோ நிர்மலா அவன் பக்கமே போகவில்லை.

மறுநாள் வழக்கம்போல் குளித்து காலை உணவிற்கு அமர்ந்தபோது எதிரே வேண்டா வெறுப்பாய் ராஜா வந்து உட்கார்ந்தான்.



அவன் முகத்தில் இருந்த களைப்பைக் கண்டு அவன் இரவு முழுவதும் தூங்கவில்லை என்பதை நிர்மலா புரிந்து கொண்டாள்.

''நீ... என்னை ஏமாற்றிவிட்டாய்...'' என்றான் அவன் மொட்டையாக.

''நானா...?''

கேட்ட அவளுக்கு சிரிக்கத்தான் தோன்றியது. ஆயினும் சிரிப்பை அடக்கியபடி அவனையே பார்த்தாள்.

''உன் மனதிருப்தி... அது.. இது.. வென ஏதோ நாடகமாடி என்னை தாலி கட்ட வைத்து விட்டாய்...''

''தாலி கட்டியது நீங்கள்தானே? அவ்வளவு கூட யோசிக்காமலா கட்டினீர்கள்?''

''அதான்... நான் செய்த பெரிய தப்பு...''

''அது மட்டும்தானா...?''

அவள் கேட்டதற்கு நிமிர்ந்து முறைத்தான்.

''எத்தனை பெண்களை படுக்கையில் தொட்டிருக்கிறேன் தெரியுமா...? நீ, மட்டும்.. என்ன.. பெரிய அழகியா? பெரிய இவள்போல் என்னை மடக்கி விட்ட கொக்கரிப்பா... நான் நினைத்தால்.. உன்னை... உன்னை...''

வார்த்தைகளை முடிக்க முடியாமல் அவன் திணறத்தான் செய்தான். அவனது இயலாமையைக் கண்டு அவள் தொடர்ந்து சிரித்தாள்.

அவளது சிரிப்பு அவன் ஆத்திரத்தை மேலும் கிளறியது.

''என்னடி இளிப்பு வாழுகிறது?'' சீறி வந்தவன் நெருங்கி அவள் தலை மயிரைப் பற்றி கோபாவேசமாய் ஓங்கி அறையவும் செய்தான்.

செவிட்டில் அறை!

நிர்மலா எதிர்பார்க்கவில்லைதான். ஆயினும் அவள் பின் வாங்கவில்லை. அவன் முன் தன் பாதிப்பை கொஞ்சமும் வெளிப்படுத்தி விடக் கூடாதே! சிரிப்பை விடவில்லை.

தொடர்ந்து சிரித்தாள்.

''இன்னும் என்னடி சிரிக்கிறாய்? உனக்கு பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதா?''

அவன் அலறியபோது அவள் சிரிப்பை நிறுத்தினாள்.

''இப்போதும் அதே கதைதான். என்னை நீங்கள் அடிப்பது உங்கள் உரிமை! நீங்கள் தாலி கட்டிய உங்கள் மனைவியை நீங்கள் அடிக்காமல் வேறு யார் அடிக்க முடியும்?''

''ஓ... கதை அப்படிப் போகிறதா?''

அவன் மறுபடியும் தலையைப் பிடித்துக் கொண்டான், வேகமாய், விடுவிடுவென தன் ரூமிற்கும் சென்று விட்டான்.

ரூம் கதவை கோபமாய் அவன் ஓங்கி அறைந்த அதிர்வு அவள் இருக்கும் இடம்வரை எதிரொலித்தது.

'என்ன செய்ய?'

அவள் சொன்னதுபோல்... தாலி கட்டி ஒரு பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு... வேறு எதையோ கற்பனை செய்து ஏமாந்தது அவன் தானே!

அன்றிலிருந்து அவன் ஒதுங்கிப் போக ஆரம்பித்தான்.

வழக்கம்போல் பின்புறமாய் அவளை திடீரென அணைப்பது எதிர்பாரா நேரத்தில் கன்னத்தில் முத்த



மிட்டு அவளை திணற வைப்பது போன்ற சில் மிஷங்களை அறவே நிறுத்தியிருந்தான்.

ஆனால், அவள்...?

அவன் நிறுத்தியதை அவள் ஆரம்பித்திருந்தாள்.

காலை பேப்பரை படிக்கும்போது 'குட்மார்னிங்' சொல்லியபடி வேண்டுமென்றே கைகளை மாலையாய் அவன் கழுத்தில் போட்டாள்.

''ச்சீ!'' தீ பட்டதுபோல் அவன் துடித்து தட்டிவிட்டான். அவள் ஸ்பரிசம் பட்டாலே கம்பளிப் பூச்சி ஊர்வதுபோல் விலகினான்.

இரவில் தள்ளிப் படுத்தவனை, ''புலிக்கு இரை தயாராய் இருக்கிறது...'' என்று கூறி சீண்டினாள்.

அவன் முறைத்தாலும் கொஞ்சமும் சட்டை செய்யாது, ''அதற்குள் சலித்துப் போயிற்றா? இல்லை, இரை இடப்பக்கம் விழுந்து விட்டதால் புலி உண்ணாமல் இருக்கிறதா?'' என அவனது வேங்கைப்புலி கதையை நினைவுபடுத்துவாள்.

அவனது திணறல் அவளுக்கு சந்தோஷத்தை விட பெரும் நிம்மதியைத் தந்தது.

அவள் நினைத்ததுபோல் அவன் முழுக்க முழுக்க கொடூரன் இல்லையே...!

அவனுக்கும் நல்ல மனம் என்று ஒன்று இருக்கிறது. அது மெல்ல மெல்ல அவனுள் விழித்துப் பார்க்கிறது.

அதனாலே... திகைக்கிறான்.. திணறுகிறான்.. யோசிக்கிறான்...

அப்பா! அவன் திருந்தினால் போதும்.

எல்லாம் சரியாகிவிடும்..!

பாழாய்ப்போன முள்செடியாகிவிட்ட வாழ்க்கை பூத்துக் குலுங்கி விடும்...

பாதையே அற்ற இருண்ட காட்டில் ஒளியுடன் பாதை கிடைத்து விடும்...

எல்லா அழுக்கையும் நீக்கி விடலாம். எல்லா களங்கமும் போய்விடும்...''

அவள் புது சிந்தனையில்.. புத்துணர்ச்சி பெற்று நினைத்துக் கொண்டிருக்க.. அவனோ.. பழைய குருடியாய் அவளை அடக்கி ஒடுக்கி ஒரேயடியாய் வீழ்த்திவிட திட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

## 17

ராஜாவால் அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அடிபட்ட புலிபோல ரூமைச் சுற்றி சுற்றி வந்தான்.

எப்படியாவது அவளை தோற்கடிக்க வேண்டும்...!

எப்படியாவது அவளை வீழ்த்த வேண்டும்!

அவளை வீழ்த்தி மறுபடியும் அடிமைபோல் ஆக்க வேண்டும்...!

அது இனி.. முடியாத காரியம்...?

ஏன் முடியாது?

அவன் எப்படிப்பட்டவன்...? எத்தனை பெண்களை சாகஸமாய் வீழ்த்தியவன்... அவன் போய் ஒரு பெண்



ணிடம் தோற்று அவளைப் பழி வாங்காமல் விட்டு விடுவதா?

கூடாது என்று போர்க்குரல் தட்டுத்தடுமாறி அவனுள் ஒலித்தது.

எப்படி? நிர்மலாவை இனி பழி வாங்குவது எப்படி?

'பேசாமல் கத்தியை எடுத்து குத்தி விடலாமா?' என்று கூட எண்ணினான். மறுகணமே, 'கொலைப்பழி' தன் மீது சுளுவாய் விழும். பின் ஜெயிலுக்குப் போய் களி தின்ன வேண்டியிருக்கும்...' என்ற எண்ணம் எழுந்து தடுத்தது.

பின் என்னதான் செய்ய?

யோசித்தவனுக்கு பளீச்சென அந்த திட்டம் உதயமாயிற்று.

கொலையை நாம் செய்யாமல் வேறு யாரையும் வைத்து செய்து விட்டால். கொலைப் பழியிலிருந்து லாவகமாய் தப்பிவிட்டால்?

அவனுக்குத் தெரிந்து ஜேம்ஸ்ரோவர் என்ற கொடூரன் அவ்வூரில் இது போன்ற செயல்களுக்கு இருப்பதாய் கேள்விப்பட்டிருக்கிறான். பணம் கொடுத்தால் போதும் கச்சிதமாய் எத்தனை பேர் தலையை வேண்டுமானாலும் எடுத்து விடுவானாம்...

பேசாமல் அவனிடம் வேலையை ஒப்படைத்தால் என்ன...?

திரும்பத் திரும்ப மதுவருந்தி போதை தலைக்கேறியவனால் ராஜா சிந்தித்தான்.

அதே போதையில் தள்ளாட்டமாய் பைக்குள் கரன்ஸிகளை திணித்துக் கொண்டு காரிலேறி அந்த கூலிக் கொலையாளியைத் தேடி வெறியோடு கிளம்பினான்.

எல்லாவற்றையும் திடுக்கிடலோடு பார்த்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

அவன் பெரும் போதையில் தள்ளாட்டமாய் கிளம்பி வேகமாய் தாறுமாறாய் காரை ஓட்டிச் சென்றது அவளுள் பயத்தையும் கொடுத்தது.

அந்த பயத்தில் அவன் எங்கே போகிறான் என்பதை தெரியும் ஆவலோடு பின் தொடர்ந்தாள்.

இரவு நேரத்து மங்கிய வெளிச்சத்தில், போதையின் பார்வையில் நிஜமாகவே வண்டி ஓட்ட திணறினான் ராஜா.

எதிரே வந்த வாகனங்களின் வெளிச்சங்கள் பூதாகரமாகி அவனது கண்களை துளைத்தது.

கண்களை உலுக்கி உலுக்கி ரோட்டைப் பார்த்தவன் கடைசியில் சரக்கு லாரி ஒன்று வேகமாய் தன் எதிரே வருவது அறிந்து அதிரத்தான் செய்தான்.

அவன் நிலைமையை உணர்ந்து சுதாரிப்பதற்குள் சரக்கு லாரி வேகமாய் அவன்மீது மோதியது. அவனை அப்படியே செயலிழக்க வைத்தது. மயங்கிச் சாய்ந்தான் ராஜா.

ஸ்ரீ கிருஷ்ணா மருத்துவமனை.

அந்த ஹாஸ்பிடலின் அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டு ராஜாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அவனை ஹாஸ்பிடலுக்கு தூக்கி வந்த நிர்மலாவும் வெளியே பயங்கர கவலையோடு கண்ணீர் பொங்க நின்றிருந்தாள்.



''பயப்பட வேண்டாம் எல்லாம் சரியாகிவிடும்...'' என்று ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தார் டாக்டர்.

அவசரப் பிரிவிலிருந்த ராஜாவை மெல்ல நிமிர்ந்து கண்ணாடித் தடுப்பு வழியே நிர்மலா பார்த்தாள்.

உடம்பு முழுவதும் பாண்டேஜ் துணிகளுடன் பார்ப்பதற்கே பரிதாபமாய் ராஜா!

கடவுளே! இவரை நீதான் காப்பாற்ற வேண்டும்! மனமுருக வேண்டிக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் டாக்டர் வெளிவந்தார்.

அவரை ஆவலாய் நிர்மலா எதிர்கொண்டாள்.

''என்ன டாக்டர்?''

''ஒன்றும் பயப்படும்படியில்லை. ராஜாவின் உடம்பு நிலைமை சரியாகி விட்டது. ஆனால்...''

''ஆனால்.... என்ன டாக்டர்?''

''அவரது கால்கள் விபத்தில் சிக்கி செயலிழந்து விட்டன. இனி அவரால் நடப்பது முடியாத காரியம்...!'' டாக்டர் சொல்லச் சொல்ல இடிந்து போனாள் நிர்மலா.

## 18

ராஜாவிற்கும் விஷயம் தெரிவிக்கப்பட்டது.

அப்படியே நொறுங்கிப் போனான் ராஜா.

டாக்டர் போய்விட்டார்.

ராஜாவால் நம்ப முடியவில்லை. ரொம்ப நேரம் அப்படியே அசையாமல் இருந்தான். குளமாகியிருந்த கருவிழிகள் மட்டும் நீர் வழிய அசைந்தது. கீழ்நோக்கிப் பார்த்தது. இடுப்புக்குக் கீழ் வெண்துணி, வெண்மை எல்லாவற்றையும் மறைத்துவிட்ட வெண்மை!

கடவுளே! என்ன ஒரு கொடூரமான தண்டனை! மனம் விட்டுக் கதறியவன் மறுகணமே நிமிர்ந்து கொண்டான். குரூரமானவனுக்கு கொடூரமான தண்டனைதான்! வேண்டியதுதான்! மனசாட்சி அவனை உறுத்தியது.

விதி அப்படித்தானே விளையாடும்?

நிர்மலாவை என்னவெல்லாம் செய்தான் எப்படியெல்லாம் துன்புறுத்தினான்...

முதன்முதலில்.. அவளை ரெயில் நிலையத்தில் பார்த்தபோது.. அந்தக் கள்ளங்கபடற்ற.. மாசு மருவற்ற... பால் முகமாய்.. அவளை பார்த்தது அவனது நினைவுக்கு வந்தது.

அவளைத்தானே ஈவு இரக்கமில்லாமல் குதறினான்? காமவெறியன் போல் ஒவ்வொரு இரவும் கதறடித்தான்!

அதற்கு இது சரியான தண்டனை...

கால்கள் மட்டுமல்ல...

கைகளும் போயிருக்க வேண்டும்...

விபத்தில் காலைப்போல் இந்த இரு கைகளும் நைந்து முடவன்போல்.. யாருக்கும் உதவ முடியாத குரூபியாக அவன் ஆகியிருக்க வேண்டும்...!

ஆனால்...

இந்தக் கைகள் போகவில்லையே...



இந்தக் கைகளால் என்னவெல்லாம் செய்திருக்கிறேன். நிர்மலாவை எவ்வளவு மூர்க்கத்தனமாய் இந்தக் கைகள் நடத்தியிருக்கிறது. இந்தப் பாவப்பட்ட கறை படிந்த கைகளுக்கு தண்டனையில்லையா? தண்டனை தர வேண்டாமா...

விடுவிடுவென அவன் மனம் பின்னோக்கிப் பாய்ந்தது.

அவனது வெறியுணர்வு திரும்பி வேகமாய் அவனையே சுட்டது.

தன்னைத்தானே அப்படியே பொசுக்கிவிட துடித்தான் அவன்.

கைகளை ஓங்கி பரபரவென அடித்தான். முகத்தில் அறைந்து கதறினான்.

அவனது அலறல் கேட்டு முதலாவது வந்தது நர்ஸ். இரண்டாவது சீஃப் டாக்டர்!

கைகளை வேகமாய் கட்டிலில் அறைபவனை தடுத்தார். அவனை ஆசுவாசப்படுத்தினார்.

"நான் பாவி டாக்டர்...! ஒரு பெண்ணுக்கு நிறைய கொடுமைகள் செய்துவிட்டேன். அவளை நிறைய துன்புறுத்திவிட்டேன்.. அதற்கு இந்தத் தண்டனைகள் போறாது.. என் கைகளும் போயிருக்க வேண்டும்... அவைகளும் செயலிழந்துபோக வேண்டும்.. செயலிழக்க... செய்யுங்கள்... டாக்டர்...

"ப்ளீஸ்... டாக்டர்... ஏதாவது ஆபரேசன் செய்து என் கைகளையும்... துண்டித்துவிடுங்கள்... அதுதான் என் போன்ற கொடூரர்களுக்கு சரியான தண்டனை."

மேலும், மேலும் ராஜா கதறினான்.

தாங்க முடியாமல் அரற்றினான்.

ஆனால்...

எல்லாவற்றையும் கொஞ்சமும் புன்னகை மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

ராஜா கதறுவதை டாக்டரின் சிரிப்பைக் கண்டு சட்டென நிறுத்தி அவரை துணுக்குற பார்த்தான்.

''டாக்டர் நான் சொல்வது உண்மை. நான் திருந்தி விட்டேன். என்னை நீங்கள் நம்பவில்லையா?'' என்றான். மேலும் பதட்டமாய்.

எல்லாவற்றையும் ரூம் மறைவிலிருந்து நிர்மலாவும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளால் கண்களை, காதுகளை கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

எதற்கும் திருந்தாதவன் டாக்டர் கொடுத்த 'அதிர்ச்சி வைத்தியத்தில்' திருந்தி விட்டானா?

துடிக்கிறானே.. இது நிஜம்தானா?

கால்களை இழந்தது போதாதாம்... கைகளையும் இழக்க வேண்டுமாம்...

அவன் குற்றத்தையெல்லாம் ஒப்புக் கொள்கிறானே... அவளைச் சிறுக சிறுக துன்புறுத்தியது... அவளிடம் மூர்க்கத்தனமாய் நடந்து கொண்டது எல்லாவற்றையும் பாவமன்னிப்பாய் சொல்கிறானே...?

''டாக்டர்.. நான் சொல்வது நிஜம்.. நிர்மலாவை நான் கொடுமைப்படுத்தினேன்.. கொடூரமாய் நடந்து கொண்டேன். ஆனால், அவளை நெருங்கும் போதெல்லாம்.. வேறு எந்த பெண்ணை நெருங்கும்போதும் எழாத உறுத்தல் எண்ணுள் எழும். அழகிய மலர் ஒன்றை கசக்கி எறிகிறாயே... என்று மனசாட்சி துடிக்கும்.. அதையும் மீறித்தான் சில சமயங்களில் செய்தேன்... டாக்டர்...''



'அட! மனசாட்சிக்கூட இருக்கிறதா...? ஓ... அதனால் தான் இரவுகளில் மூர்க்கமாய் நடந்துவிட்டு மதுவருந்தி மனநிலையை சரிப்படுத்தும் வழக்கமோ...?'

இவன் சொல்வது நிஜம்தானே? நம்பக் கூடிய மாற்றம்தானே?

மெல்ல மறைவிலிருந்தே அவனது முகத்தைப் பார்த்தாள்.

இருபுறமும் தாரைதாரையாய் கண்ணீர் வழிந்தோட... செய்த தவறுகளுக்கு நிஜமாகவே வருந்தியவனாய் உடம்பு குலுங்க தாங்க முடியாமல் அழுது கொண்டிருந் தான்.

டாக்டர் புன்சிரிப்பு மாறாமல் பார்த்தவர் அவன் கைகளை ஆதரவாய் பிடித்து அழுத்தினார். ''மிஸ்டர். ராஜா, ப்ளீஸ் காம் டவுன்..! நீங்கள் கொடுமைப்படுத்தியதாய் தவ றிழைத்துவிட்டதாய் சொன்ன பெண் இவர்கள்தானே?'' என்றபடி டாக்டர் திரும்பி மெல்ல சைகை செய்தார்.

மறைவிலிருந்து மெல்ல வெளிப்பட்டு அவன் முன் வந்தாள் நிர்மலா.

''நிர்மலா.. நீயா..? நீ... எப்படி.. இங்கு?''

பதறியவன் மறுகணமே, ''உன் முகத்தை நான் பார்க்கக் கூடாது. இந்தப் பாவியை நீ பார்ப்பதே பாவம்.. போய் விடு.. நிர்மலா...!''

கைகளால் இறுக முகத்தைப் பொத்திக் கொண்டு தாங்க முடியாமல் அரற்றினான்.

அவனது இறுகிய கரங்களை தன் மலர் கரத்தால் பற்றி அவள் மெல்ல பிரித்தபோது அவன் நம்ப முடியாமல்தான் பார்த்தான்.

அதைவிட நிர்மலா தன்னை நோக்கி இனிமையாய் புன்னகை செய்தது அவனை அதிரச் செய்தது.

''நிர்மலா.. நீ.. நீ.. மன்னித்துவிட்டாயா? இவ்வளவு கொடூரங்கள்.. செய்த.. பிறகும்.. என்னைப் பார்த்து எப்படி எப்படி உன்னால் புன்னகைக்க முடிகிறது..?

''நான் பாவி நிர்மலா...! கடவுள் எனக்கு சரியான தண்டனை கொடுத்து விட்டார்... விபத்தில் எனது இரண்டு கால்களையும் ஒடித்து செயலிழக்க வைத்துவிட்டார்...''

இம்முறை நிர்மலா திரும்பி டாக்டரைப் பார்த்தாள்.

டாக்டர் முன்னால் வந்தார்.

''மிஸ்டர் ராஜா, உங்கள் கால்கள் செயலற்றுப் போயிருப்பது உண்மை தான். ஆனால், சீக்கிரமே, அவைகளுக்கு உயிர் வந்து விடும்...''

''என்ன சொல்கிறீர்கள் டாக்டர்...?'' அதிர்ந்து கேட்டவனை அமைதியாய்ப் பார்த்தார் டாக்டர்.

''மிஸ்டர் ராஜா, உங்கள் கால்களுக்கு ஒன்றும் ஆகவில்லை. 'ஸேடேடிவ்' மூலம் மயக்க உணர்ச்சி கொடுத்து கால்பகுதியை மரத்துப்போகும்படி செய்திருக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு உணர்வு வந்து விடும்...''

''என்ன கால்களுக்கு ஒன்றும் ஆகவில்லையா? உணர்வு வந்து விடுமா?''

நம்ப முடியாமல் வாய் பிளந்தவனை புன்னகையாலே அடக்கினார்.

''ஆகவில்லைதான்...! உங்களால் உணரத்தான் முடியாது... தவிர, பார்க்க முடியும். உங்களது கால் பகுதியை அசையுங்கள். கால் அசைவதை உங்களால் பார்க்க முடியும்...''



டாக்டர் சொன்னபடி ராஜா அசைத்துப் பார்த்தான் கால் அசைந்தது.

''உங்களுக்கு விபத்தில் ஏற்பட்டது வெறும் சிராய்ப்புகளும் ஊமைக் காயங்கள்தான் ராஜா. விபத்து நடந்ததும் நீங்கள் அப்படியே மயங்கி விட்டீர்கள். உங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தது உங்களுடைய நிர்மலாதான்...!''

''நிர்மலா நீயா? நீ எப்படி அங்கு வந்தாய்?''

வியந்தவனிடம் நிர்மலா அமைதியாய், ''நீங்கள் மது நிறைய அருந்தி விட்டு தள்ளாடிச் சென்றது... காரையெடுத்து தாறுமாறாய் வேகமாய் ஓட்டிச் சென்றது எனக்கு பயத்தைக் கொடுத்தது. ஒரு டாக்ஸியில் உங்களைப் பின் தொடர்ந்தேன்...''

டாக்டர் தொடர்ந்தார், ''உங்களை அப்படி சேர்த்து விட்டு இரவு முழுவதும் நிர்மலா தூங்க முடியாமல் மௌனமாய் அழுதது என்னை திடுக்கிடச் செய்தது... ஆகவே விசாரித்தேன்.

அப்படி என்ன காரணம் எதுவென்று விசாரித்தபோது உங்கள் கடந்த கால வாழ்க்கை.. நிகழ்ச்சிகள் முழுவதையும் ஒன்று விடாமல் சொன்னார்கள்.

எனக்கு அப்போதுதான் இந்த 'அதிர்ச்சி வைத்திய முறை' பற்றி ஞாபகம் வந்தது...''

''அதிர்ச்சி வைத்தியா முறையா?''

''ஆமாம் ராஜா. நான் மருத்துவ மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற போது, ஹார்வர்டு பல்கலைக் கழக நிபுணர் ஒருவர் எனக்கு கற்றுக் கொடுத்த வித்தை இது. சில சமயம் நம் மனம் தறிகெட்டு தவறான பாதையில் செல்லும்போது, அதை நிறுத்த, எந்த ஒரு வழிகளும்

இல்லாமல் போய்விடும். பிரேக் அறுந்த வண்டி வேகமாய் தறிகெட்டு போவதைப் போல மூளை போகும். அப்போது மனம், மூளை இரண்டையும் ஸ்தம்பிக்க வைக்கும் அதிர்ச்சி ஒன்றைக் கொடுத்தால்... சட்டென மனம் திகைத்து... நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு.. கட்டுப்பட்டு விடும். அந்த நபரும் முற்றிலும் திருந்த வாய்ப்பு உண்டு. இதுதான் அதிர்ச்சி வைத்திய முறை...''

மேல்நாட்டில் பயின்ற இந்த அதிர்ச்சி வைத்திய முறையை பிரயோகித்துதான்... உங்கள் கால்களுக்கு மயக்க ஊசி போட்டு மரத்துப் போக செய்து... உங்களிடம் உங்கள் கால்கள் செயலற்றுப் போய் விட்டதாய் நாடக மாடினோம்.. நீங்களும் நாங்கள் நினைத்தபடியே அதிர்ச்சியில் திருந்திவிட்டீர்கள், நல்லவனாக மாறிவிட்டீர்கள்!''

டாக்டர் சொல்லச் சொல்ல மனம் தெளிந்து திகைப்பு நீங்கினான் ராஜா. அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. டாக்டரை நோக்கி கை கூப்பினான்.

## 19

டாக்டர் புன்சிரிப்புடன் வெளியேறினார்.

நிர்மலா ராஜாவை நெருங்கி தனது மருண்ட விழிகள் படபடக்கப் பார்த்தாள்.

ராஜா அந்தப் பார்வையை சந்திக்க முடியாமல் விழிகள் தாழ்த்தினான்.



அவனது விழிக்கடை ஓரமாய் இரு பெரிய நீர்மணிகள் உருண்டு ஓடுவதைக் காணவும் நிர்மலா உருகித்தான் போனாள். இன்னும் அழுகிறானா என்ன?

சட்டென அவன் அருகே அமர்ந்து குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டு அவன் கண்களைத் துடைத்து விட்டாள்.

''என்னை மன்னித்துவிடு நிர்மலா, நான் உன்னை ரொம்பவே துன்புறுத்தி விட்டேன்.. ஆனால், நிஜமாய்.. நிஜமாகவே சொல்கிறேன்... உன்னை நெருங்கும்போது.. உன்னை துன்புறுத்தும்போது.. என் மனதில் அதுவரை எழாத உறுத்தல் ஒன்று எழுந்து விசுவரூபமாய் என்னை பயங்காட்டும் தெரியுமா?''

''ஓஹோ! அதுவேறா?'' என்று வியந்தவள் அவன் கண்களில் மறுபடி துளிர்ந்து ஓடிய நீர்த்துளிகளைக் கண்டு அது உண்மைதான் என்பதை புரிந்து கொண்டாள்.

''ஒவ்வொரு முறை தவறைச் செய்துவிட்டு பால்கனிப் பக்கம் போய் மருகுவேன். அந்த சுயவெறுப்பில்தான் அடிக்கடி மதுவைக்கூட நாடினேன்... ஆனால் என் குரூரம் குறையவில்லை...''

சொல்லியபடி சோகமாய் தலையை பிடித்துக் கொண்டவன், ''ஆனால்... ஆனால்.. எல்லாவற்றிலும் நான் செய்த உருப்படியான காரியம் ஒன்றே ஒன்றுதான்! உனக்குத் தாலி கட்டியதுதான்...! விளையாட்டுக்காக செய்தாலும்.. ஊரறியாவிட்டாலும் அது தாலிதானே..?''

''அந்த தாலி ஒன்றுக்காகத்தானே நான் அத்தனையையும் பொறுத்துக் கொண்டேன்...'' என்று அவள் சொன்ன போது விடாது மருகியவன், ''அப்படி உன்னை அடைவதற்கு என்னை தாலி ஒன்றை கட்ட வைத்து

விட்டாயே என்ற கோபத்தில்தான் எனது கொடுமைகள் எல்லாம் கட்டவிழ்ந்தது போல் உன்னிடம் மூர்க்கமாய் நடந்து கொண்டேன். மேலும், சிறு வயது முதலே பெரும் பணம் புரள நான் வளர்ந்த விதம், எதிலும் தன்னிச்சை யாய் தான் தோன்றித் தனமாய் எடுக்கும் முடிவு.. கண்டிப்பதற்கு ஆள் இல்லாமல் நினைத்ததை நினைத்த படியே முடிக்கும் வெறி... எல்லாம் ஒன்று சேர்ந்து.... என்னைக் கொடூரக்காரனாய் ஆக்கி விட்டது...''

விடாது பேசி நிறுத்தியவன் தன் மேல் வைத்திருந்த அவளது விரல்களை மெல்ல நீவியபடி நிமிர்ந்தான்.

''நான் செய்த கொடுமைகளுக்கு வெறும் வார்த்தை களால் மன்னிப்புக் கேட்க முடியாது. ஆனாலும், கேட் கிறேன் நிர்மலா, நீ என்னை மன்னிக்க வேண்டும். மன்னிப்பாயா நிர்மலா?

கண்ணீரும் கம்பலையுமாய் தன் ஆழ்ந்த குரலில் மெய் யான வருத்தம் ஒலிக்க அவன் கேட்டபோது நிர்மலா மனம் கசிந்து உருகித்தான் போனாள்.

கண்ணில் நீருடனும் உதடுகளில் புன்முறுவலுமாக நிர்மலா தலையை உயர்த்தி அவனுடைய கன்னத்தில் தன் பட்டான இதழ்களை ஒற்றி எடுத்தாள்.

அவன் அவளை அப்படியே இறுக்கி தனது நெஞ்சோடு சாய்த்துக் கொண்டான். சிணுங்கியவளின் காதுகளில், ''விரைவிலே சென்னைக்குப் பயணம். ஊறிய திருமணம்...'' என்ற தித்திப்பான செய்தியை சொல்லி மேலும், முகம் சிவக்க வைத்தான்.

அவனது அணைப்பில் கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் நிர்மலா.